# My Computer

நமக்காக நாமே    எனது கணினி : நவம்பர் 2007

04



Rs 30/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிந்தால் வெல்லுங்கள் -03

1.www.flickr.com தற்போது எந்த நிறுவனத்திற்கு சொந்தமானது?
2.ARPA net என்பதில் ARPA யின் விரிவு என்ன?
3.ரோபோக்கள் பற்றி முதன்முதலில் கதைகளில் கூறியவர் யார்?
4.மவுஸ்(Mouse) என்பதன் தமிழ்ப்பதம் என்ன?
5.கடைசியாக தமிழ் இணையமாநாடு 2004 இல் எங்கே நடைந்தது?

உங்கள் விடைகள் எம்மை வந்தடைவதற்கான இறுதித்திகதி : 25.12.2007

## முடிந்தால் வெல்லுங்கள் -02 இற்கான விடைகள்

1.அப்பிள் 2.Land Grid Array 3. **Widows Vista**
4. இயங்குதளம் 5. **Linux Trovald**

## பரிசை வெல்லும் வெற்றியாளர்கள்

5 வினாக்களுக்கும் சரியான விடைகளினை அனுப்பி குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டு 6 மாத சந்தாவை வெற்றிகொள்ளும் மூன்று அதிஸ்டசாலிகள

1)இலக்ஸ்மிகாந்தன் பிரமிளா -தரம் -10 மானிப்பாய் மகளிர் கல்லூரி
2)சிவந்தினி சுகுமார் -குப்பிளான் தெற்கு ஏழாலை
3)சுந்தரலிங்கம் சுஜன் பேர்மா இல்லம் உரும்பிராய்

இவர்களுக்கு எமது பாராட்டுக்கள். உங்களுக்கான 6 மாத இதழ்கள் வருகின்ற 5வது வெளியீட்டில் இருந்து அனுப்பி வைக்கப்படும்.

---

## *சந்தா விபரம்*

MyComputer உங்கள் வீடுதேடி வரவேண்டுமா? உங்கள் முழுப்பெயர் முகவரி,தொலைபேசிஇலக்கம் போன்ற விபரங்களுடன் சந்தாக் கட்டணத்தினை திருநெல்வேலி தபாலகத்தில் மாற்றக் கூடியதான காசுக்கட்டளையாகவோ அன்றி த.தவரூபன் என்றபெயருக்கான காசோலையாகவோ அனுப்பிவையுங்கள். நேரில் அலுவலகத்திலும் பதிவுசெய்யலாம்

**ஒருவருடம் (12 இதழ்கள்) : 360ரூபா ,6 மாதம்(6 இதழ்கள்): 180ரூபா**

## விளம்பரக்கட்டணம்

My Computer இல் விளம்பரம் செய்ய விரும்புவோருக்கு

| | முழுப்பக்கம் | 1/2 பக்கம் | 1/4 பக்கம் | 1/8 பக்கம் |
|---|---|---|---|---|
| பின்அட்டை(2கலர்) | 8000 | 4000 | - | - |
| உள்அட்டை | 5000 | 3000 | 2000 | 1000 |
| உள்பக்கம் | 3000 | 2000 | 1000 | 500 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

NISHOK.

# My Computer

## நமக்காக நாமே

சுவடி -1 ஓலை- 4 கார்த்திகை 2007


பக்கம் உள்ளே...

02 – அமரிக்க லொட்டரியும் நம்மவரும்..
04 – மந்திரப்பேனாக்கள்
06 – இன்ரனெட் எனும் இணையம்(3)
07 – புதுவரவுகள்
08 – மின்வணிகம் (1)
10 – மின்னஞ்சல் வைரஸ்..
13 – ஓடியோவை எம்.பி.3 ஆக்க
15 – விஸ்டா சகாப்தம்
16 – டயலொக் மின்னஞ்சல்..
17 – இணையத்தளங்கள் அறிமுகம்
18 – அதிஸ்ட எண் கண்டுபிடிக்க..

பக்கம் உள்ளே...

19 – கருத்துப்பெட்டி
20 – கொம்யூட்டர்ஜீ பதில்கள்
22 – உதவித்துளிகள்
23 – ஒ∴பீஸ் 2007 உம் 2003 உம்
24 – கணினியிலே இனிய தமிழ்..
27 – கணினிக்கிண்டல்கள்
28 – நீ எங்கே நான் அங்கே
31 – ஸ்கைப்பில் பேசுங்க..
34 – விசுவல்பேசிக் 6.0 (4)
38 – எழுதப்பழகுவோம் HTML(3)
40 – தொடக்கநிலையினருக்காக


Desktop Shortcut இன் Background நிறத்தை நீக்குவதெப்படி ?
சிறந்த அன்ரிவைரஸ் எது?
சற்றிங் செய்வதெப்படி?
சட்டவுண்செய்ய Restart ஆகிறதா?
படங்களின் அளவைக்குறைத்து மின்னஞ்சல் செய்வதெப்படி ?

பதிலளிக்கிறார் கொம்யூட்டர்ஜி
விரையுங்கள் பக்கம் 20 இற்கு


*தொடர்புகளிற்கு:*
**My Computer 72/28,** பணிக்கர்லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

*தொலைபேசி:* **021 4591871**
**SMS : 077 7563213**
*மின்னஞ்சல்:*
**mycomputer@speeditnet.com**
*இணையத்தளம்:*
**www.mycomputer.speeditnet.com**

ஆசிரியர்: த.தவரூபன்
**thava@speeditnet.com**
இணை ஆசிரியர்: ஜெ.பிரதீபன்
*வெளியீடு:*
**SPEED IT NET**
அச்சுப்பதிப்பு: **Smart Printers**
**717, K.K.S. Road, Jaffna.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அமெரிக்கன் லொட்டரி விசாவும் ! நம்மவரும்!

ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 3 ம் திகதி நம்மவரில் பலருக்கு ஏழரைச்சனிக்கு பதில் அமெரிக்க விசா பனி வந்தவிடும் என்றால் யாரும் மறுப்பதற்கில்லை நாட்டின் சூழ்நிலை காரணமாக நம்மில் பலரின் இறுதி இலட்சியமாக வெளிநாட்டு பயணமே இருக்கிறது.போனவர்கள் சொல்கிறார்கள் நம்நாடு போல வருமா? என்று .இதனை சிலர் அக்கரைமாட்டுக்கு இக்கரை பச்சை என்று எள்ளி கையாடுவதுண்டு இதைபற்றி விமர்சிக்கும். நிலையில் நான் இல்லை ஏன் எனில் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் அவரவர்களுக்கு வரும்போதுதான் சுயரூபம் தெரியும்.

இந்நிலையில் சிறிது காலத்துக்கு முன்பு நம்மில் பலர் கனடா விசா விண்ணப்பங்களை விழுந்தெழும்பி அனுப்பியமை நினைவுகூரத்தக்கது.எது எப்படியோ இப்படியான நிலைகளில் ஊடகங்கள் தான் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும் தனிப்பட்டவர்கள் ஓர் சமூகத்தின் தலையில் புளிகரைக்க அனுமதிக்க கூடாது. செய்திகளை விளம்பரங்களை வெளியிடும்போது அவதானமாக செயற்படவேண்டும். இந்த வகையில் நாம் ஒரு தகவல் தொழில்நுட்ப ஊடகம் என்கிற ரீதியில் எமது துறை சம்பந்தப்பட்ட விடயமொன்றை இங்கே தெளிவுபடுத்த முனைகிறோம்

உலகில் குடியேற்றவாத நாடுகளில் அமரிக்காவும் ஒன்று. இந்நாட்டில் பெரியளவிலான பண்ணை நிலங்கள் இன்னும் அபிவிருத்திக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றன.அவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் இங்குள்ள காடுகளை அழித்து நகரங்களாக மாற்றுவதற்கும் அந்நாட்டரசு முயன்றுகொண்டிருக்கிறது. இதற்காக அமெரிக்க குடிவரவு திணைக்களம் வருடம்தோறும் 55 ஆயிரம் வெளிநாட்டு பிரசைகளுக்கு அமெரிக்காவில் வாழ்வதற்கான நிரந்தர பிரசாவுரிமை வழங்கி வருகிறது.

இதனை அதிஸ்ட குலுக்கல் முறையில் மேற்கொண்டு வருகிறது அங்கீகரிக்கப்பட்ட உலக நாடுகளில் இருந்து விண்ணப்பங்களை பெற்று கணினி உதவியுடன் குலுக்கல் முறையில் 55ஆயிரம் பேரை தெரிவுசெய்வார்கள் அதிலும் இலங்கையினைப்பொறுத்தவரை சுமார் 350 பேர்வரையில் தெரிவுசெய்யப்படுகிறார்கள். இது அனைவருக்கும் தெரிந்த விடயம். பிரச்சனை இதிலல்ல. அனுப்பும் முறையில் தான் உருப்பெறுகிறது.

ஆரம்பகாலங்களில் மாதிரி விண்ணப்ப படிவத்தை நாமே தயாரித்து தபாலில் அனுப்பவேண்டியிருந்தது. அவ்வேளைகளில் புத்தகசாலைகளில் விண்ணப்பப்படிவங்களை சில அச்சகங்கள் தயரித்து விற்பனைக்கு விட்டிருந்தன. இதனைப்பெற்று இலவசமாக நாமே அமெரிக்க தூதரகத்திற்கு அனுப்பக்கூடியதாகவே இருந்தது. இங்கேயும் மாதிரிப்படிவத்தினூடாக சிலர் உழைத்துக்கொண்டனர். அது அன்றைய நிலை

இன்றைய நிலை வேறு. உலகம் கணினி ,இன்ரநெட் என வளர்ந்துவிட உலகவல்லரசு நாடான அமெரிக்காவும் தன் பங்கிற்கு மேற்படி விண்ணப்ப முறையில் மாற்றங்களை செய்தது. ஆம் தபால் மூல விண்ணப்ப முறையினை இரத்து செய்து இணையத்தினூடக மட்டுமே விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் முறையினை அமுல் படுத்தியிருக்கிறது.கடந்த சில வருடங்களாகவே இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. வருடம்தோறும் http://dvlottery.state.gov என்ற இணையத்தளத்தினூடாக மட்டும் புகைப்படங்களுடன் கூடிய விண்ணப்பங்கள் இலவசமாக குறித்த காலப்பகுதியான ஒக்டோபர் 3ம் திகதி தொடக்கம் டிசம்பர் 3ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதற்கு எவ்வித கட்டணங்களும் இல்லை. இணையப்பாவனையில் பரீட்சயம் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எவரும் இதனை மேற்கொள்ள முடியும்.முடியாதவர்கள் தமது நண்பர்கள் தெரிந்தவர்கள் மூலம் செய்துகொள்ளலாம். இணையசேவை நிறுவனங்கள் சில தமது சேவைக்கட்டணமாக ஒரு தொகையினை அறவிட்டு விண்ணப்பத்தினை அனுப்புகிறார்கள்.சாதாரணமாக ஒரு விண்ணப்பத்தினை அனுப்ப அதிகூடியது 10 நிமிடங்கள் எடுக்கும் மேலும் படங்கள் ஸ்கான் செய்யப்பட்டனவாயின் 2mmX2mm ஆகவோ டிஜிரல் கமெராவில் எடுக்கப்பட்டதாயின் 320x240 pixel ஆகவே இருக்கவேண்டும் இதைவிட 62.5 KB இற்கு மேற்படாத கொள்ளளவுடையதாகவும் இருக்கவேண்டும்.படத்தில் தலை 50 வீதத்துக்கு மேற்படாதிருக்க வேண்டும் பின்புலம் ஒரே நிறத்தில் இருக்க வேண்டும் தலை திரும்பியிருக்க கூடாது.கூடுதலான ஒளி வழங்கப்பட்டிருக்க கூடாது.

கூடுதலான விண்ணப்பங்கள் படங்களின் தகுதி இன்மையினாலேயே நிராகரிக்கப்படுகின்றன பரிசோதிக்கும்போது அடிப்படை தகுதியினை பெற்றிருந்தாலும் மேலதிக தகுதிகளை அப்படங்கள் கொண்டிருப்பதில்லை.நம்மவரில் பலர் சிறிய படங்களை பெருப்பிப்பதும்(செவ்வகத்தில் இருந்து சதுரமாக) வெவ்வேறுபின்புலங்களுடையதில் இருந்து வெட்டி எடுப்பதும் என ஒரு பெரிய எடிட்டிங்கே செய்து முடித்துவிடுகிறார்கள். நிச்சயம் இவற்றில் பல நிராகரிக்கப்படும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை .

விண்ணப்பம் கிடைத்தவுடன் அமரிக்காவின் கணினியில் இருந்து இணையத்தினூடாக கிடக்கும் வெற்றிச்செய்தியானது வெறுமனே விண்ணப்பம் கிடைத்ததற்கான சான்றே தவிர அது ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான சான்றல்ல.அதனை அச்செடுத்து வைத்திருப்பதன்மூலம் எவ்வித இலாபமும் இல்லை. நீங்கள் குலுக்கலில் தெரிவுசெய்யப்பட்டால் நீங்கள் தபால்மூலம் அடுத்த முறை விண்ணப்பம் ஏற்கப்படுவதற்கு முன்பு அறிவுறுத்தப்படுவீர்கள். உங்கள் பெயர்விபரம் ஒருபோதும் இணையத்தில் வெளியிடமாட்டார்கள்

இதுதான் மேற்படி விசாவின் நடைமுறை. அதைவிடுத்து தபாலில் காசுக்கட்டளையுடன் விண்ணப்பம் அனுப்புதல்,மின்னஞ்சலில் வரும் இணையத்தள விளம்பரங்களினுடாக சென்று வேறுஇணையத்தளங்களில் பதிவுசெய்து அதன் பின் பணம் செலுத்தக்கோரும் தொலைபேசி அழைப்புக்களினால் நித்திரை குழம்பி அல்லல் படுதல்களை தவிர்த்துக்கொள்ளுங்கள்

மின்னஞ்சலில் ஆயிரம் இணையத்தளங்கள் பற்றி விளம்பரங்கள் வரலாம் இந்த இணையத்தளங்களில் அமரிக்காவின் சுதந்திர தேவி சிலை அரச இலச்சனை போன்றவை காணப்படலாம் இவைகளைக்கண்டு மயங்கிவிட வேணடாம் இவை அனைத்துமே ஏமாந்தவர்களிடம் இருந்து பெருமளவு பணத்தை சுருட்டும் அங்கீகரிக்கப்பட்ட வியாபார தந்திரமே.


மேற்படி அளவுகளில் படத்தை எடுத்தபின் நீங்கள் அனுப்புவதாயின் நாம் மேலே தந்த இணையத்தளத்திற்கு மட்டும் செல்லுங்கள் இலவசமாக விண்ணப்பத்தை அனுப்புங்கள்.அல்லது இணைய சேவை நிலையம் ஒன்றை நாடி நியாய சேவைக்கட்டணத்தில் அனுப்புங்கள். ஆ-ர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொழில்நுட்பம்

# மந்திரப் பேனாக்கள்!



### டிஜிட்டல் பேனா...

செல்போன் மாதிரி இதுவும் மிகவும் அடக்கமான ஊழியன். எங்கே போனாலும் மறக்காமல் சட்டைப் பையில் தொற்றிக் கொள்ளும் ஆப்த நண்பன். அது இதுவரை எழுதும் வேலையை மட்டும் செய்து கொண்டிருந்தது. இப்போது டிஜிட்டல் சர்க்கசும் செய்ய ஆரம்பித்திருக்கிறது.

பொதுவாக நிறைய பேருக்குக் கணினியில் எழுதுவது என்பது சிரமமான வேலை. அவர்களுக்குத் தட்டச்சு செய்வது பழக்கமாகி, வேகமாக அதில் முன்னேறுவது என்பது மிக மிகச்சிரமம். அதேசமயம், இன்று கணினியில்தான் எழுதி ஆகவேண்டும் என்ற நிலையும் உருவாகிக்கொண்டிருக்கிறது. என்ன செய்யலாம்?

இதுபோன்றவர்களுக்கு உதவவே டிஜிட்டல் பேனா வந்திருக்கிறது. இந்தப் பேனா மூலம் நீங்கள் எழுதுவது அப்படியே படிக்கப்பட்டு, நேரடியாகக் கணினித் திரையில் தெரியும். அதேபோல் நீங்கள் ஓவியர் என்றால், நீங்கள் வரைவதும் அப்படியே திரையில் தோன்றும்.

இதை இவ்வளவு எளிதாக எழுதிவிட்டேன்... ஆனால், இதன் பின்னுள்ள தொழில்நுட்பம் அவ்வளவு எளிதாக முன்னேறி வந்துவிடவில்லை. இதை 'இலக்க முறை நிலைப்படுத்தல் தொழில்நுட்பம்' (Digital Positioning Technology) என்று அழைக்கிறார்கள்.


நீங்கள் எங்கோ வெளியில் ஒரு கூட்டத்தில் தகவல்களைக் குறிப்பெடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள். அதைச் சேமிக்க அங்கே கணினி இல்லை. என்ன செய்வது? அந்தக் குறிப்புகளை நீங்கள் எழுதும் பேனாவிலேயே சேமித்து வைத்துவிட்டால்? 'மேக்ஸெல்' நிறுவனம் தயாரித்துள்ள 'பெனிட்' (Penit) என்ற டிஜிட்டல் பேனாவில் இதை செய்ய முடியும். பேனாவில் சேமிக்கப்பட்ட தகவல்களை யூ.எஸ்.பி. மூலமாகவோ புளூடூத் மூலமாகவோ கணினிக்கு மாற்றிக்கொள்ளலாம்.

'இபாஸ்' எனும் நிறுவனம் வயர்லெஸ் டிஜிட்டல் பேனாவையும் சுட்டியை (Mouse) ம் இணைத்துவிட்டது. இதன் மூலம் கையால் எழுதும் அத்தனை தகவல்களையும் கணினிக்குக் கொண்டு வரலாம். அதோடு இதே பேனாவை கணினியின் சுட்டியாகவும் பயன்படுத்தலாம்.

கணினியோடு பேனாவால் தொடர்புகொள்ள முடியும் என்றால், செல்போனோடு தொடர்புகொள்ள முடியாதா என்ன? அதையும் 'நொக்கியா' நிறுவனம் தனது, 'நோக்கியா டிஜிட்டல் பென் எஸ்யூ - 27டபிள்யூ' (Nokia Digital Pen SU-27W) மூலம் செய்துகாட்டி விட்டது. இந்த பேனாவோடு வரும் குறிப்பேட்டில் எழுதியதையோ அல்லது படம் வரைந்ததையோ அப்படியே புளூடூத் தொழில்நுட்பம் மூலம் நொக்கியா செல்போன்களுக்கு அனுப்பி வைக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




அடுத்தகட்டமாக இந்தப் பேனாவை குட்டி ஸ்கானராகவும் ஆக்கிவிட்டார்கள். 'ஹைறெக் சொல்யூசன்ஸ்' என்ற நிறுவனம் 'டொக்கு ஸ்கான் பென்' (Docu Scan Pen) என்ற பேனாவை உருவாக்கியிருக்கிறது. வெறும் 56 கிராம் எடையுள்ள இந்தக் குட்டி ஸ்கானரில் எந்த ஒரு பக்கத்தையும் நான்கே நொடிகளில் ஸ்கான் செய்துவிடமுடியும் இந்த 'டொக்கு ஸ்கான் பென்'னோடு, ஒரு மென்பொருளும் இருக்கிறது. இதன்மூலம், நீங்கள் ஸ்கான் செய்யும் தகவல்களை மைக்ரோசொஃப்ட் வேர்டாகவோ, எக்ஸெல்லாகவோ, பவர்பொயின்ட்டாகவோ மாற்றிக்கொள்ள முடியும்.

இந்த டிஜிட்டல் பேனா தொழில்நுட்பத்தில் 'சொனி' நிறுவனமும் குதித்திருக்கிறது. அது செய்துவரும் முன்னேற்றம், இன்னும் சுவாரஸ்யம் நிரம்பியது. உதாரணமாக, இரண்டு பேர் கணினி முன்னால் ஒரே அறைக்குள் உட்கார்ந்துகொண்டு வேலை செய்தாலும், ஒருவரிடம் இருக்கும் கோப்பை மற்றவரிடம் தரவேண்டும் என்றால், அதை ஒரு புளொப்பி அல்லது சி.டி யில் எழுதித் தரவேண்டும். அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். அல்லது உள்ளக வலைப்பின்னல் இருக்குமானால், அதைப் பயன்படுத்தி எடுத்துக் கொள்ளவேண்டும். இதெல்லாம் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல் இல்லை?

ஒரு ஃபைலை ஒரு மேசையில் இருந்து அடுத்த மேசைக்குத் தூக்கிப் போடுவதுபோல், ஒரு கணினியில் இருந்து அடுத்த கணினிக்குத் தூக்கிப் போட முடிந்தால் எப்படி இருக்கும்? இதற்கு 'தூக்கிப் போடும்' (Pick and Drop) எண்ணக்கரு என்று சொல்கிறார்கள். அதாவது, உங்கள் கணினியில் ஒரு வேர்ட் ஃபைல் இருக்கிறது. அதை டிஜிட்டல் பேனாவால் கணினித் திரையில் தொடவேண்டும். உடனே அந்த ஃபைல் பேனாவில் சேமிக்கப்பட்டுவிடும். அதன்பிறகு அந்த பேனாவை வைத்து இன்னொரு கணினியின் திரையைத் தொட்டால் அந்தத் தகவல்கள் அப்படியே அந்தக் கணினியில் இறங்கிவிடும். ஏதோ சின்னப் பிள்ளைகள் விளையாட்டுபோல் இருக்கும் இதை டிஜிட்டல் பெருசுகள் விரைவில் சாத்தியமாக்கப் போகிறார்கள். அதற்கான ஆரம்பகட்ட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இத்தகைய வசதிகள் மட்டுமின்றி எஃப்.எம். ரேடியோ, குரல்களை ரெக்கோர்ட் செய்யும் வசதி, எம்.பி 3 பிளேயர் என பல வசதிகள் இந்த பேனாவில் வந்துவிட்டது. அதுமட்டுமல்ல, பேனா முனையில் மசாஜ்ஜரும் வந்துவிட்டது. இனி பேனாவை ஏதோ எழுதுவதற்கான சாதாராண கருவிதானே என்று நினைத்துவிடாதீர்கள். அது டிஜிட்டல் தேவதையின் செல்லக் குழந்தை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இன்ரநெட் எனும் இணையம்-03

இணையம்(இன்ரநெட்) பற்றியும் இதனது முக்கியத்துவம் வரலாறு தொழில் நுட்பங்கள் பற்றியும் ஓரளவுக்கு சென்ற இதழ்களில் பார்த்தாகிவிட்டது உங்கள் ஆவலை கிளறியபின்னும் மேற்கொண்டு முக்கிய விடயத்தை சொல்லாதிருப்பது நல்லதல்லவே. முக்கிய சில விடயங்களை இவ்விதழில் ஆராய்வோம்..

**இணையத்தில் இணைவது எப்படி?**

சாதாரணமாக நாம் இணையத்துடன் இணைந்து கொள்வதற்கு மூன்று முக்கிய வழிகள் இருக்கின்றன.

- •வீடுகளிலோ அலுவலகங்களிலோ அன்றி வாகனங்களிலோ இருந்தவாறு தமது கணினிகளின் ஊடாக இணைதல்
- •கைத்தொலை பேசிகளினூடாக இணைதல்
- •இணைய நிலையங்களில் (இன்ரநெட் கஃபே அல்லது இன்ரநெட் சென்ரர்) சென்று இணைந்து கொள்ளல்

இதைவிடவும் இங்கு நாம் உபயோகிக்கும் தொலைபெசி மையங்கள் (ரெலிபோன் பூத்) போன்று சந்திக்கு சந்தி முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டிருக்கும் இணைய மையங்கள் (இன்ரநெட் பூத்) ஊடாகவும் இணைந்து கொள்ளலாம்.இது வெளிநாடுகளில் சர்வ சாதாரணம். இங்கு நிலைமை உங்களுக்கு தெரிந்ததே.


இந்நிலையில் ஓடும் வாகனங்கள் விமானங்கள் விண்வெளி ஓடங்கள் நீர்முழ்கிக்கப்பல்கள் கப்பல்கள் போன்றவற்றில் பயணிப்போரும் இணையத்தில் இணைந்து கொள்கிறார்கள் அவர்கள் முதலாவது வகைக்குள் அடக்கப்படலாம்.

இங்கு குறிப்பிடவேண்டிய விடயம் யாதெனில் இணைந்து கொள்வதற்கான வழிகள் வேறு இணைப்பு முறைகள் என்பது வேறு.மேலே இணைந்து கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெவ்வேறு இணைப்பு முறைகள் கையாளப்படுகின்றன அவை அனைத்தையும் விலாவாரியாக விவரிக்க உள்ளேன்.

**இணைய இணைப்பு முறைகள்:**

முக்கியமாக குறிப்பிட்டுச்சொல்லக்கூடியதாக 5 வகையான இணைப்பு முறைகள் உள்ளன.

அ) டயலப் தொழில்நுட்பம் (Dial Up Service)
ஆ)டி.எஸ்.எல் அல்லது ஐ.எஸ்.டி.என்



தொழில்நுட்பம்(DSL / ADSL / ISDN Service)
இ) கேபிள் தொழில்நுட்பம்(Cable TV)
ஈ)செய்மதி தொழில்நுட்பம் (Satellite Service)
உ)வயர்லெஸ் தொழில்நுட்பம் (Wireless Service)

இந்த இணைப்பு முறைகளில் ஏதாவது ஒன்றினை பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட மூன்று வகைகளில் இணையத்தில் இணைந்து கொள்ள வாடிக்கையாளர்களுக்கு வழிசெய்து கொடுக்கவென நிறுவனங்கள் உள்ளன. இந்நிறுவனங்கள் தொலைத்தொடர்பு சேவையுடன் தொடர்புபட்டவையாக இருக்கும். இவ்வாறான நிறுவனங்களை இணைய சேவை வழங்குனர்கள்(Internet Service Providers) எனப்படுகின்றனர்.

இந்த ISP கள் அரசாங்கத்தில் அனுமதி பெற்றிருக்கவேண்டும்.இவ்வாறு அனுமதி பெறாமலும் பலர் இருக்கிறார்கள்.குறிப்பாக சொல்வதானால் உங்களுக்கு தொலைபேசி இணைப்பு வழங்கியவர்கள் இணைய இணைப்பை வழங்கக்கூடியவர்களாக இருப்பர். இதற்காக இன்ரநெட் கஃபே நடாத்துகிறவர்களை ISP என்று சொல்ல முடியாது.இவர்கள் ISP ஏதாவது இடமிருந்து சேவை பெற்று உங்களுக்கு அதனை உபயோகிக்க பணம் அறவிடுகிறார்கள். இது வாத்தக நோக்கிலானது அவ்வளவுதான். முற்சொன்ன இணைப்பு முறைகள் செலவாகும் பணம்,இணைப்பு வேகம்,பயன்பாட்டு மட்டுப்பாடு(Bandwidth),பயன்படுத்துவோர் எல்லை(User Limit) போன்றவற்றில் வேறுபடுகின்றன. மேலும் முன்சொல்லப்பட்ட 3 வகைகளில் கைத்தாலைபேசியில் இணையத்தை உபயோகிப்பது சற்று வித்தியாசமானது.எனினும் மற்ற இருவகையிலான உபயோகத்திலும் மேற்சொன்ன ஐந்து இணைப்பு முறைகளில் ஏதாவது ஒரு முறையினை பயன்படுத்தி இணையத்தில் இணைந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புதிய-வரவுகள்

## விற்றுத்தீர்ந்தது Zune மல்ரிமீடியா பிளேயர்



மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் கடந்த நவம்பர் 14 ம்திகதி விற்பனைக்கு விடப்பட்ட Zune மல்ரிமீடியா பிளேயரையே அருகில் காண்கிறீர்கள் இது சந்தைக்குவந்த சிறிது நேரத்திலேயே விற்றுத் தீர்ந்துவிட்டதாம் இதனுடைய கொள்ளளவு என்ன தெரியுமா 80GB

## *iPod nano* பிளேயர்

கீழே காட்டப்படுவது அப்பிள் நிறுவனத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட 8 GB கொள்ளளவு iPod nano பிளேயர் ஆகும் இதன் விலை சுமார் 20 000 ரூபா

இப்ப iPod
காலம் பாருங்கோ!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மின்வணிகம் (e-commerce)

## பாகம்-01

-தருவது: த.தவரூபன்-



தகவல் தொழிநுட்பம் எத்துறையிலும் இல்லாமலில்லை என்பதை நான் உங்களுக்கு சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அந்தவகையில் வணிகத் துறையில் இன்று உலகளாவிய ரீதியில் தகவல் தொழில்நுட்பம் புகுந்து விளையாடிக்கொண்டிருக்கின்றது. எனவே பலதரப்பட்டவர் களினதும் வேண்டு கோளை ஏற்று எமது சஞ்சிகையில் இத்தொடரை ஆரம்பிக்கின்றோம். இதுதொடர்பில் உங்கள் கருத்துக்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன இவை இக்கட்டுரைத் தொடர் சிறப்புற வழி வகுக்கும்.

**அறிமுகம்**

மின்வணிகம் பற்றி முழுமையான கண்ணோட்டத்தினை செலுத்தமுன்பாக , பாரம்பரிய வணிகம் பற்றி ஓரளவு தெளிவான பார்வை நம்மிடத்தில் ஏற்படுவது அவசியம். வணிகத்தினை விளங்கிகொண்டால் மின்வணிகத்தினை பற்றிய தெளிவு தானாக வரும்

பணத்திற்காக பொருட்களையும் சேவைகளினையும் பண்டமாற்றம் செய்துகொள்வது வணிகம் எனப்படும். வணிகம் எமது வாழ்கையில் மில்லியன் கணக்கிலாக வடிவங்களில் அறியப் படுகிறது. வணிகத்தில் பங்கேற்கும் பாத்திரங்களாக/ தரப்பினராக 3 வகையினரை அடையாளப்படுத்தலாம்.

*1. நுகர்வோர்/ வாங்குவோர்* **(Buyers)**

இவர்கள் பணம் கொடுத்து பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்கிறார்கள்

*2. விற்பனையாளர்* **(Sellers)**

இவர்கள் பணத்திற்காக பொருட்களையும் சேவைகளையும் விற்பனைசெய்கிறார்கள். அவர்களில் இருவகையினர் இருக்கின்றனர் ஒன்று சில்லறை விற்பனையாளர்கள் மற்றய தரப்பினர் மொத்த விற்பனையாளர்கள். இவ்விரு தரப்பினரில் முதலாவது தரப்பினர் நுகர்வோருடன் நேரடியாக வணிகம் செய்கின்றனர்.

*3. உற்பத்தியாளர்* **(Producer)**

இவர்கள் பொருட்களையும் சேவைகளையும் உருவாக்குபவர்களாக அல்லது உற்பத்திசெய்பவர்களாக இருக்கிறார்கள். பொதுவாக உற்பத்தியாளர்கள் விற்பனையாளர்களாகவும் தொழில்படு கிறார்கள். இதில் இரண்டு வகை விற்பனையாளர்களாவும் இவர்கள் தொழிற்பட வாய்ப்புண்டு

**வணிகத்தில் பங்கேற்கும் பாத்திரங்களாக/ தரப்பினராக 3 வகையினரை அடையாளப்படுத்தலாம்.**

**மின்வணிகம் (E-Commerce) என்றால் என்ன?**

இணையம் உள்ளிட்ட கணினி வலைப்பின்னல்களினூடாக பொருட் களையும் சேவைகளையும் தகவல்களையும் வாங்குதல் விற்றல் பரிமாற்றல் பண்டமாற்றல் செய்யும் தொழிற்பாடு மின்வணிகம் எனப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மின்வர்த்தகம் (E-Business) என்றால் என்ன?**

பரந்துபட்ட மின் வணிகம் மின் வர்த்தகமாகும். அதாவது வாங்குதல் விற்றல் நடவடிக்கைகளுடன் வாடிக்கையாளர் சேவை, பங்காளர் நிறுவனங்களுடனான நடவடிக்கைகள், நிறுவனத்துக்குள்ளான இலத்திரனியல் பயிற்சியை வழங்கல் இலத்திரனியல் பரிமாற்றங்களை செய்தல் போன்ற அனைத்து நடைவடிக்களும் மின் வர்த்தகம் என்ற எண்ணக்கருவில் அடங்கும் மேலே விபரிக்கப்பட்ட மூன்று தரப் பட்டவர்களும் எந்த ஒரு மின்வணிக நடவடிக்கையிலும் காணப்படுவர் இருந்தபோதிலும் மின்வணிகம் சற்று வித்தியாசமானது

ஒரு வெற்றிகரமான மின்வணிகத்தினை மேற்கொள்ள பின்வரும் விடயங்கள் அவசியமானவையாகும்

1. உற்பத்தி (Product) அது பொருளாகவோ சேவையாகவோ அன்றி ஒரு தகவலாகவோ இருக்கலாம்

2. இடம் இங்கு அது இணையத்தளமாக இருக்கும் அத்தளத்தில் சில வழிகளினூடாக குறித்த உற்பத்தி காட்சிப்படுத்தப் பட்டிருக்கும்

3. நுகர்வோரை குறித்த தளத்திற்கு வரவழைப்பதற்கான வழிகள் (பின்னர் விபரிக்கப்படும்)

4. நுகர்வோரின் கொள்வனவு விருப்பை (Order) பெறுவதற்கான ஏற்பாடு. இது தளத்தில் ஒரு விண்ணப்ப படிவமாக (Form) இருக்கலாம்

5. பணத்தை பெறுவதற்கான/ ஏற்றுக்கொள்வதற்கான வழி - பொதுவாக வியாபார கணக்கு ஒன்றை வங்கியில் பேணுவதன்மூலமாக கடனட்டை மூலமான பணத்தினை ஏற்றுக்கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்படலாம். இதற்கு



பாதுகாப்பான கொள்வனவு விருப்பு ஏற்றலுக்கானதும் வங்கியுடன் தொடர்பு கொள்வதற்கான இணையப்பக்கம் அவசியம்

6. கப்பல் அல்லது விமானம் மூலமாக உற்பத்தியை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடு. மென்பொருள் எனின் அதனை இணையத்தளத்தினூடாகவே பதிவிறக்கம் செய்வதற்கான ஏற்பாடு போன்ற நடவடிக்கையினை மேற்கொள்வதன் மூலம் குறித்த வணிக நடவடிக்கையினை பூரணப்படுத்தல்

7. உட்திரும்பல்களை ஏற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்தியிருத்தல்

8. தேவைப்படின் விற்பனையின் பின்னரான உத்தரவாதத்தை கையாள்வதற்கான ஏற்பாடு அல்லது வழி

9. வாடிக்கையாளர் சேவையினை வழங்கும் வழிவகைகள்

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மின்னஞ்சல் வைரஸ் (e-mail virus)

——— வலைச்சிட்டு ———

**மின்னஞ்சலுடன் இணைந்து வரும் வைரஸ்களின் செயல்பாடுகள்.**

பெரும்பாலான வைரஸ்கள் மின்னஞ்சல்கள் மூலம்தான் பரவுகின்றன. வைரஸ் இணைந்த இணைப்புக் கோப்பை மின்னஞ்சலுடன் ஒருவருக்கு அனுப்பி வைத்தால் போதும். இணைப்பை ஒருவர் திறந்தவுடன் அவருடைய கணினியில் அமைக்கப்பட்டுள்ள முகவரிப்புத்தகம் (Adress book) திறக்கப்பட்டு அதில் உள்ள எல்லா முகவரிக்கும் அந்தக் கடிதம் வைரஸ் இணைப்புடன் உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறே ஒவ்வொருவருடைய முகவரிப்புத்தகத்தில் உள்ளவர்களுக்கும் வைரஸ்கள் பரவுகின்றன. மின்னஞ்சல்கள் மூலம் பரவுகிற வைரஸ்கள் இணையத்தின்(இன்டர்நெட்டின்) தரவு (data) போக்குவரத்தை பெரிதும் பாதிக்கின்றன. இந்த வேகத் தடை மட்டுமல்ல, சில வகை மின்னஞ்சல் வைரஸ்கள் கணினியின் முக்கிய அமைப்பு கோப்புக்களை (system file) அழித்து விடுகின்றன அல்லது அவற்றை மாற்றிவிடுகின்றன.

இன்னும் சில வகை மின்னஞ்சல் வைரஸ்கள், கணினியில் உள்ள பாதுகாப்பு ஓட்டையை திறந்து வைத்து அதன் மூலம் விசமிகள் உங்கள் கணினியில் நுழைந்து பாதிப்பு ஏற்படுத்த வழி ஏற்படுத்தி விடுகின்றன. பொதுவாக மின்னஞ்சல்கள் மூலம் பரவுகிற வைரஸ்கள் வின்டோஸ் 9x/Me/2000/2003/XP ஆகிய இயங்கு தளங்களில் தான்(ஒப்பரேட்டிங் சிஸ்டங்களில்) பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

**மின்னஞ்சலில் நீங்கள் எப்படி தெரிந்துகொள்வது?**

பொதுவாக வைரஸ்கள் கொண்ட மின்னஞ்சல்களின் Subject இல் test, hi, hello, status, error, Mail Delivery System, mail transaction failed அல்லது Server Report என்ற சொற்கள் கொண்டிருக்கும். எனவே இந்த மாதிரியான பொருளடக்கம் கொண்டு வருகிற மெயில்களைத் திறக்காமல் இருப்பதுதான் நல்லது. மெயிலுடன் வருகிற இணைப்பு கோப்புக்களில்(Attachment) வைரஸ்கள் ஒளிந்திருக்கும் என்பதை மறவாதீர்கள்.

பொதுவாக இந்த இணைப்பு கோப்பின் பெயர் document, readme, text, doc, file, data, message, body அல்லது test என இருக்கலாம். இந்த பைலின் எக்ஸ்டென்சன்(Extention) தான் முக்கியமானது. பொதுவாக பல இணைப்பு கோப்புகளில் இரண்டு எக்ஸ்டென்சன்(Extention)கள் இருக்கும். முதல் எக்ஸ்டென்சன்(Extention) பெயர் .htm, .txt, .doc என இருக்கும். இதைப் பார்த்தவுடன் அந்த கோப்பு ஆபத்தில்லாதது. அதில் வைரஸ் எதுவும் இல்லை என நாம் நினைத்துக் கொள்ளுவோம்.

இணைப்பு கோப்பின் இரண்டாவது எக்ஸ்டென்சன்(Extention) தான் ஆபத்தானது. அது Ax .pif, .scr, .exe, .bat, .cmd என இருக்கலாம். பொதுவாக கோப்பின் இரண்டாவது எக்ஸ்டென்சன் (Extention) மறைந்திருக்கும், அல்லது முதல் எக்ஸ்டென்சன்(Extention) க்கும் இரண்டாவது எக்ஸ்டென்சன்(Extention) க்கும் இடையில் ஏராளமான இடைவெளிகள் (Spaces) இருக்கலாம். மெயிலின் உள்ளே கீழ்க் காணும் செய்திகளில் ஒன்று காணப்படலாம்.

Mail transaction failed.Partial message is available: The Message Contains Unicode characters and has been sent as a binary attachment. The message can not be represented in 7bit ASCII encoding and has been sent as a binary attachment.

எனவே மின்னஞ்சலின், பொருளடக்கம், இணைப்பு கோப்பின் பெயர், மின்னஞ்சலின் உள்ளடக்கம் ஆகியவற்றை வைத்து ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மின்னஞ்சலில் உள்ள இணைப்பு கோப்பில் வைரஸ் உள்ளதா இல்லையா என்பதை ஓரளவு நாம் அறிந்து கொள்ள முடியும். எனினும் அன்ரி வைரஸ் மென்பொருள் கொண்டு மின்னஞ்சலின் இணைப்பைச் சோதிப்பதுதான் பாதுகாப்பு நிறைந்த வழியாகும்.

**மின்னஞ்சல் வைரஸ் என்ன செய்கிறது?**

வைரஸ் தொற்றியுள்ள இணைப்பு கோப்பை நீங்கள் திறந்தவுடன் அது என்ன செய்கிறது என்பது வைரசைப் பொறுத்து வேறுபடும். எடுத்துக்காட்டாக Shimg வைரசானது தனது பெயர் கொண்ட shimgapi.dll என்ற கோப்பை windows/system கோப்புறையில் (போல்டரில்) உருவாக்குகிறது. மேலும் Windows/temp என்பதன் கீழ் Message என்ற Text கோப்பையும் Windows/system கோப்புறையில் (போல்டரில்) taskmon.exe என்ற கோப்பையும், விண்டோஸின் ரெஜிஸ்ட்ரியில் (Registry) சில பெறுமானங்களையும் மாற்றுகிறது.

அடுத்ததாக உங்கள் கணினியில் உள்ள .htm, .sht, .asp, .php, .dbx, .tbb, .adb, .ph, .web, .txt மற்றும் .csv எக்ஸ்டென்சன்(Extention)கள் கொண்ட கோப்புக்களை அந்த வைரஸ்கள் திறந்து பார்க்கின்றன. அவற்றில் மின்னஞ்சல் முகவரிகள் உள்ளனவா எனத் தேடிப் பார்க்கின்றன. இருந்தால் தங்களது சொந்த எஸ் எம் டிபி (SMTP) பொறியை உபயோகித்து , அந்த முகவரிகளுக்கு வைரஸ்கள் கொண்ட இணைப்பு கோப்புக்களை மின்னஞ்சல்கள் மூலம் அனுப்பி வைக்கின்றன.

**மின்னஞ்சல் வைரஸை அழிக்க:**

புதிய மின்னஞ்சல் வைரஸ் வெளியாகி அழிவை ஏற்படுத்திய பின்பு அதற்கான அன்ரி-வைரஸ் வெளியாகும். அதை இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து உங்கள் கணினியில் நிறுவுங்கள். உங்கள் கணினியில் உள்ள வைரசை அது அழிக்கும்

**மின்னஞ்சல் திருட்டு (Phishing)**

கணினி மற்றும் இணையத்தின் பயன்பாடு அதிகரித்து வரும் இந்நாட்களில் அதனால் வரும் ஆபத்துக்களும் கூடி வருகின்றன. இன்று மின்னஞ்சல் நமக்குப் பல வழிகளில் கை கொடுக்கும் ஒரு சாதனமாகும். ஆனால் அதுவே நம்மைப் பெரிய சிக்கல்களில் சிக்க வைத்து பண இழப்பைத் தரும் வழியாகவும் அமைந்துள்ளது.

நண்பர் ஒருவர் தனக்கு வந்த மின்னஞ்சல்களை பார்வையிட்டார். அவற்றுள் ஒரு மின்னஞ்சல் அவருடைய வங்கியில் இருந்து வந்துள்ளதைக் கவனித்தார். நமக்கு எதற்கு வங்கி மின்னஞ்சலை அனுப்பியிருக்கிறது என நினைத்து அதைத் திறந்து பார்த்தார். குலுக்கல் முறையில் அவர் பெயர் தேர்வு செய்யப் பட்டுள்ளதாகவும், ரூபாய் 4 லட்சம் மதிப்புள்ள காரை அவர் இலவசமாகப் பெற்றிருப்பதாகவும், அதனை, அவர் பெயரில் பதிவு செய்ய சில விவரங்கள் தேவைப் படுவதாகவும், அந்த விவரங்களை நிரப்ப, வங்கியின் இணையத்தளத்திற்கான தொடர்பை (link) மின்னஞ்சலின் உள்ளே கிளிக் செய்யுமாறும் அந்த மின்னஞ்சலில் குறிப்பிட்டிருந்தது. வங்கியின் இணையதளத்திற்கு நேரடியாக உலவி (பிரவுசர்) மூலம் சென்றால் இந்த விவரங்களை நிரப்ப முடியாது என்றும், மின்னஞ்சலின் உள்ளே காணப்படுகிற வங்கியின் இணையத்தள தொடர்பை கிளிக் செய்து சென்றால்தான் நிரப்ப முடியும் எனவும் எச்சரிக்கை செய்தி அந்த மின்னஞ்சலின் உள்ளே குறிப்பிடப் பட்டிருந்தது.

அவர் மகிழ்ந்தார். இலவசமாகக் கார் கிடைக்கும்போது மகிழ்ச்சி இல்லாமலா இருக்கும்? மின்னஞ்சலின் உள்ளே தரப்பட்டிருந்த அந்த தொடர்பை (லிங்கை) கிளிக் செய்தார். அந்த வங்கியின் முகப்பு இணையப் பக்கம் கணினி திரையில் தெரிந்தது. வங்கியின் இணையத் தளம்தானே வேறு எதிலும் நுழைய வில்லையே என மீண்டும் பார்த்தார். அந்தத் தளம்தான், அதே முகப்பு வெப் பக்கம்தான். வங்கியின் அந்த முகப்பு திரையில் தெரிந்தவுடன் மகிழ்ந்தார். அவர் பெயர், பிறந்த நாள், அப்பா பெயர், வீட்டு முகவரி, வங்கி கணக்கு எண், அதன் கடவுச்சொல், கடனட்டை எண் எனப் பல விவரங்கள் அங்கு கேட்கப்பட்டன. எல்லாவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொடுத்தார். ஒரு வாரத்தில் காரின் பதிவு சான்றிதழ் மற்றும் காரின் திறப்பும் உங்கள் வீட்டிற்கு தபாலில் அனுப்பப்படும். காரை வந்து பின்பு எடுத்து செல்லலாம் என அந்த வங்கி தளம் கூறியது.

இரண்டு மூன்று நாட்கள் கழித்து வங்கியில் இருந்து பணம் எடுக்கலாம் என நினைத்து நண்பர் வங்கிக்குச் சென்றார். உங்கள் கணக்கில் பணம் இல்லை என வங்கி அலுவலர் தெரிவித்தார். நான் ஒன்றும் பணம் எடுக்கவில்லையே என ப்பதட்டத்துடன் நண்பர் முறையிட்டார். இல்லை ஒன்லைன் மூலமாக நீங்கள் பொருட்களை வாங்கியுள்ளீர்கள். அதற்காக உங்கள் பணம் கொடுக்கப்பட்டுள்ளது என வங்கி அலுவலர் விளக்கினார். அது எப்படி முடியும்? அவர் யோசித்தார். விசயம் புரிந்தது. வங்கியின் பெயரைச் சொல்லி இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு தனக்கு வந்த மின்னஞ்சல் நினைவிற்கு வந்தது. தான் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதைத் தெரிந்து கவலை அடைந்தார்.

என்ன கதை நன்றாக இருக்கின்றதா? இதைப்போலவே எம்மில் பலருக்கு அமெரிக்க கிறீன் கார்ட் விசா விழுந்துவிட்டதென்றும், அதிஸ்டலாபச் சீட்டில் பரிசு விழுந்துவிட்ட தென்றும் அல்லது குறித்த மின்னஞ்சலை பலருக்கு அனுப்பினால் நிறுவனம் பணம் தரும் என்றும் மின்னஞ்சல்கள் வந்தவண்ணம் உள்ளன. இதுதொடர்பில் கூடிய கவனத்துடன் இருக்கும் நான் கூட அண்மையில் ஒரு மின்னஞ்சலை பலருக்கும் மீள அனுப்பிய சந்தர்ப்பம் நிகழ்ந்தது உனவே அவதானமாயிருக்கவேண்டியது அவசியம்

மேற்சொன்ன கதையில் அவருக்கு ஏற்பட்ட நிகழ்ச்சியைச் செயலை Phishing என இணையத்தில் குறிப்பிட்டுச் சொல்வார்கள். ஒரு நிறுவனம் அனுப்பிய மின்னஞ்சல் போன்று தெரியும். அந்த மின்னஞ்சல் உள்ள லிங்க்கைக் கிளிக் செய்து அந்த நிறுவனத்தின் வெப் தளத்திற்கு வருமாறும், வந்தால் பரிசுகள் பல காத்திருக்கு மென்றும் அந்த மின்னஞ்சல் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த லிங்கைக் கிளிக் செய்தால் அந்த நிறுவனத்தின் வெப் தளம் போன்று காட்சி யளிக்கிற ஒரு ஏமாற்று வெப்தளம் கிடைக்கும். அங்கு உங்களைப் பற்றிய ரகசிய விவரங்களைக் கறந்து விடுவார்கள்.

உங்களை நம்ப வைத்து கழுத்தறுக்கிற வேலையை Phishing மின்னஞ்சல் செய்யும்.

**இந்த ஏமாற்று வேலையில் இருந்து எப்படி தப்பிக்கலாம்?**

சில முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொண்டால் இதிலிருந்து தப்பலாம். உங்கள் உள் நுழைவு (login) பெயர், கடவுச் சொல் (password), வங்கி கணக்கு எண், கடனட்டை (Credit Card) எண் போன்றவற்றைக் கேட்கிற மின்னஞ்சல்களை நம்பாதீர்கள். சந்தேகம் ஏதாவது எழுந்தால், மின்னஞ்சலை அனுப்பியதாகக் கூறுகிற நிறுவனத்தையே தொலைபேசியில் விசாரியுங்கள். முன்பின் தெரியாத நபர்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து வருகிற மின்னஞ்சல்களைக் கண்டு கொள்ளாமல் அழித்து விடுங்கள்.

பாதுகாப்பு இல்லாத வெப் தளங்களில் உள்ள படிவங்களை நிரப்பாதீர்கள். Internet Browser இன் கீழே மூடிய பூட்டு படம் தெரிந்தால் அல்லது https:// என முகவரியில் (கவனிக்கவும் http அல்ல, https என இருக்க வேண்டும்) தெரிந்தால் அந்த தளம் பாதுகாப்பு நிறைந்தது எனத் தெரிந்து கொள்ளலாம். மின்னஞ்சலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


உதவித்துளிகள்

# Audio CD பாடலை ஐ MP3 யாக மாற்ற

Audio CD ஐ MP3 சீடி யாக மாற்றி கணினியில் சேமித்தலை Rip செய்தல் என்கின்றோம் அதனை பல்வேறு மென் பொருட்களினூடாக செய்ய முடியும் இலகுவாகவும் சிறப்பாகவும் செய்யக்கூடிய மென் பொருள் விண்டோஸ் மீடியா பிளேயர் இதனூடாக Rip செய்ய முல் நீங்கள் கவனிக்க வேண்டிய விடயம் Setting. இது வருமாறு

விண்டோஸ் மீடியா பிளேயரின் Tools என்ற மெனுவின் உடாக பெறப்படுகின்ற Options என்ற உப மெனுவை கிளிக்செய்து பெறப்படும் விண்டோவில் Rip Music இல் Format ஆக mp3 இனை தெரிவுசெய்யவும் பின்னர் Privacy இல் என்பதன் கீழ் Enhanced Playback Device Experience உள்ள முதல் மூன்று தெரிவுகளை நீக்கிவிடவும் இனி OK இனை கிளிக் செய்வதே அதுவாகும். பழைய மீடியா பிளேயர் பாவிப்பவர்கள் மேற்படி விண்டோவில் Player பகுதியில் காணப்படுகின்ற **Acquire licenses automatically** என்பதற்கான தெரிவை நீக்கிவிட்டு சேமிக்கவேண்டும

மேலும் Rip செய்யப்பட்ட கோப்புக்கள் எங்கே சேமிக்கப்படவேண்டும் என்பதையும் Rip Music பகுதியில் மாற்றிக்கொள்ளலாம்




பலர் ஓடியோ கோப்புக்களை சாதாரணமாக சீடியில் இருந்து கணினிக்கு பிரதிசெய்துவிட்டு இவை பின்னர் குறித்த சீடி அன்றி படல்களை கேட்கமுடியாமல் திண்டாடுவார்கள் இதற்கு இனி அவசியமில்லை எனலாம்

---

உள்ளே உள்ள வெப்தள லிங்க்கை (web links) எக்காரணம் கொண்டு கிளிக் செய்யாதீர்கள். வங்கிகள் போன்றவற்றில் நீங்கள் ஒன்லைன் கணக்கு (Online Account) வைத்திருந்தால் அவற்றில் உள்ள பண இருப்புகள் சரியாக உள்ளனவா என அவ்வப்போது பாருங்கள். ஏதாவது சந்தேகம் வந்தால் அந்த நிறுவனங்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# PC PARK

PCP
the path to computer paradigm

கணணிகள், சகலவிதமான கணணிகளுக்குரிய உதிரிப்பாகங்கள் அனைத்தும் ஒரே இடத்தில், நியாயவிலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்....

## Labtop Computers Amazing Price



HP Laptop
Intel ® M430 1.73GHz

75,000/-

HP Compaq Presovio
C- 563TV 72250 NoteBook
Intel Pentium Dual Core 1.73GHz



95,000/-

ViewSonic 15", 17" CRT Monitors, ViewSonic 17" LCD Monitors Panora 15" LCD Monitors
**3 Year Warranty**

Asus Mother Board, Asus VGA Card, Asus Optical Drivers
**3 Year Warranty**

Kingston Flash Memory 1GB & 2 GB, Kingston RAMs
**1 Year Warranty**

Power Tree UPS 650 W
**1 Year Warranty**

DVD Writers, DVD Roms, Combo Drives
**1 Year Warranty**

HP Laser Printers, HP Deskjet Printers, Laser Printer Toners
**1 Year Warranty**

A4tech Keyboard, Optical Mouse

### Dealers sample price

Samsung DVD-RW dual layer - 4000
Asus light scribe DVD RW - 4350
Kingston DDR II 512mb RAM - 2350
Simtronic DDR II 512mb RAM - 2500
Maxtor 80Gb 7200rpm SATA - 5150
Dealers க்கு குறைந்த விலையில்
Dealers விண்ணப்பிக்கலாம்.

Kingston hp invent intel ViewSonic ASUS Logitech

# 633,K.K.S Road, Jaffna.
Telephone: 021 2229581 Fax: 021 2229581 hotline: 0773068998
email: info@pcparkonline.com web: www.pcparkonline.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொடங்கியது வின்டோஸின் விஸ்டா சகாப்தம்!

புதுசு

ஏறத்தாழ ஆறு ஆண்டுகள், 600 கோடி அமரிக்க டொலர்கள், 5000 கணினி மென்பொருள் வடிவமைப்பாளர்கள் எனப் பல்வேறு வகைகளில் பெரிய அளவில் தயாரிக்கப்பட்ட மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் அடுத்த இயங்குதளம் (ஒப்பரேட்டிங் சிஸ்டம்) வின்டோஸ் விஸ்டா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வெளியிடப்பட்டுவிட்டது. தற்போது வந்திருக்கும் பொதுமக்களுக்கான விஸ்டா பதிப்பு மக்களிடையே பலத்த வரவேற்பைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முற்றிலும் புதிய சில வசதிகள் இந்த வின்டோஸ் இயங்குதளத்தில் இருக்கின்றன வன்பொருள் சாதனத்தை(Hardware Device) அடிப்படையாகக் கொண்டு இயங்கும் ஏரோ கிளாஸ் எனப்படும் பயனர் இடைமுகம், கூடுதலான வழிகளில் தேடி அறியும் வசதி, புதிய ஓடியோ சிஸ்டம், கூடுதல் பாதுகாப்பு போன்ற விஸ்டா தரும் வசதிகள் பெரும்பாலும் புதியனவாகத்தான் இருக்கின்றன. ஆனால் விஸ்டா இயங்குதளத்தினை தங்கள் கணினியில் நிறுவி இயக்க வன்பொருள் சாதனங்கள் அதற்கிணையான வகையில் மேம்படுத்தப்பட வேண்டும். இதற்கு முன் இயங்குதளங்கள் வெளிவந்தபோது மேற்கொள்ளப்பட்ட வன்பொருள் தேவைகளைக் காட்டிலும் தற்போது கூடுதலாகவே தேவை இருக்கும் விஸ்டா நிறுவி இயக்கக் கீழ்க்காணும் குறைந்த பட்ச அளவிலான வன்பொருள் சாதனங்களுடன் ஒரு கணினி வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

800 மெகா கேர்ட்ஸ்(MHz) வேகம் கொண்ட



நுண்செயலி(புரோசசர்),குறைந்தது 20 ஜிகாபைட் (GB) காலி இடம் உள்ள கார்ட் டிஸ்க்(Hard Disk), குறைந்தது 128 எம்பி வீடியோ RAM கொண்ட கூடுதல் திறனுடன் கூடிய கிர்.பிக் கார்ட் (VGA Card) ஆகியவை சில அடிப்படைத் தேவைக ளாகும். 512MB RAM.

கணினி தயாரிக்கும் நிறுவனங்கள் விஸ்டா சிஸ்டத்தினை எதிர்பார்த்தே அதனை ஏற்றுக் கொள்ளும் வகையில் தங்கள் கணினிகளை வடிவமைத்து விற்பனை செய்து வந்துள்ளனர். எனவே இவர்கள் விண்டோஸ் விஸ்டாவிற்கு மாறிக் கொள்ள பிரச்சனை இருக்காது. பழைய எக்ஸ்பி கணினிகள் வைத்திருப் போர்கள் தங்கள் மெமரியினை கூடுதலாக்க குறைந்த அளவில் பணம் செலவழிக்க வேண்டியதிருக்கும். விண்டோஸ் விஸ்டாவின் இன்னொரு சிறப்பம்சம் இது 18 பன்னாட்டளவிலான மொழிகளில் வெளியிடப் பட்டது என்பது தான்

எது எப்படியோ நம்மில் பலருக்கு விஸ்டாவு க்கு மாறுவதற்கு மனம் இடம்கொடுக்க வில்லை. எக்ஸ்பியின் வல்லாதிக்கம் ஒழிய ஒருசில வருடங்கள் எடுக்கும் என நம்பலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உங்கள் டயலொக் மின்னஞ்சலை செயற்படுத்த...

## மொபைல் தொழில்நுட்பம்

சென்ற முறை டயலொக் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் இறுதி 7 இலக்கங்களுடன் @dialog.lk என இடப்பட்ட மின்னஞ்சல் உண்டு எனவும் இதற்கு அனுப்பப்படும் மின்னஞ்சல்கள் SMS ஆக கிடைக்கும் எனவும் கூறியிருந்தோம். செய்தி அறிந்த வாசகர் பலர் எம்முடன் தொடர்புகொண்டு எப்படி அதை செயற்படுத்துவது என கேட்டிருந்தனர். நாம் முன்னர் இதற்கு வாடிக்கையாளர் சேவையான **0777678678** இற்கு தொடர்புகொள்ள வேண்டும் என கூறியிருந்தோம். இதனை செயற்படுத்துவதற்கு ஏதேனும் குறுக்கு வழி இருக்காதா என அறிய டயலொக் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டபோது மகிழ்ச்சியான செய்தி கிடைத்தது. உங்கள் மின்னஞ்சலை செயற்படுத்த ACT DMAIL என ரைப்செய்யப்பட்ட SMS Message இனை **678** என்ற இலக்கத்துக்கு அனுப்பினால் சரி.

இவ்வாறு எமது இணைப்புக்குரிய பல சேவைகளை செயற்படுத்த முடியும் இதற்கு ACT என ரைப்செய்து இடைவெளிவிட்டு குறித்த சேவைக்கான குறுக்கச்சொல்லை ரைப்செய்து **678** என்ற இலக்கத்துக்கு அனுப்பினால் குறிப்பிட்ட சேவை செயல் நிலைப்படுத்தப்படும்

மேலும் தேவையற்றபோது மின்னஞ்சல்கள் SMS ஆக வருவதை தடை செய்யவும் முடியும். RECIEPT OFF அல்லது RECIEPT ON என ரைப்செய்து **8831** இற்கு அனுப்பினால் தடைசெய்யவோ அல்லது மீளச்செயற்படுத்தவோ முடியும்.

எம்மில் பலருக்கு வாடிக்கையாளர் சேவைகளுடன் தொடர்பு கொள்வதென்றால் ஏனோ தெரியவில்லை கதி கலங்கும் என்பது நமக்கு தெரியும் என்பதனாலேயே இந்த உதவித்துளிகள். SMS ஊடாக மின்னஞ்சல் அனுப்புவது எப்படி என்றும் சென்றமுறை கண்டிருந்தோம். அதிலே மேலும் சில விடயங்களை பார்ப்போம்.

நீங்கள் SMS ஊடாக அனுப்பும் மின்னஞ்சல் ஒவ்வொன்றுடனும் உங்களைப்பற்றிய சுருக்கமான விபரங்களை Signature ஆக அனுப்பவேண்டும் என நீங்கள் விரும்பினால் இதனை முதலிலேயே ஏற்படுத்தி வைக்கலாம் அதற்கு ESIG அல்லது ESIGNATURE என ரைப்செய்து இடைவெளிவிட்டு உங்கள் Signature இனை ரைப்செய்து 8831 என்ற இலக்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.

உதாரணமாக ESIG Ravi=No1 Main Road=Nallur=Jaffna=Tel, 012678678 என ரைப்செய்து **8831** என்ற இலக்கத்துக்கு அனுப்பி வைக்கவும் இனி அனுப்பப்படும் மின்னஞ்சல்கள் யாவும்

Ravi
No1 Main Road
Nallur
Jaffna
Tel, 012678678

என்ற Signature(கையொப்பம்) உடன் செல்லும் இங்கு "=" என்பது அடுத்த வரிக்கு இறக்கப்படவேண்டும் என்பதற்குரிய குறியீட்டு எழுத்தாகும். மேலும் நீங்கள் விரும்பிய மின்னஞ்சலில் இருந்து அனுப்புவது போலவும் அனுப்பலாம். அதற்கு நீங்கள் குறித்த மின்னஞ்சல் முகவரியை இச்சேவையுடன் பதிவுசெய்திருக்க வேண்டும் அப்படி பதிவுசெய்வதற்கு MYM அல்லது MYMAIL என ரைப்செய்து இடைவெளிவிட்டு உங்கள் மின்னஞ்சல் முகவரியை ரைப்செய்து **8831** இற்கு அனுப்பவேண்டும் உதாரணமாக MYM 7563213@dialog.lk என ரைப்செய்து அனுப்பியிருப்பின் நீங்கள் SMS ஊடாக அனுப்பும் அனைத்து மின்னஞ்சல்களும் 7563213@dialog.lk என்ற மின்னஞ்சலில் இருந்து அனுப்பியதுபோல செல்லும் பதில்கள் இம்முகவரிக்கே கிடைக்கும்.

SMS ஊடாக தொலைநகல் அனுப்ப முடியுமா? அடுத்த இதழில் விடை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




1. வேம்படி.கொம் (www.vembady.com)

இது சற்று வித்தியாசமான தளம் தமிழர்கள் சார்ந்த தளமாயினும் அதனுடைய உள்ளடங்கங்கள் ஆங்கிலத்திலேயெ காணப்படு கின்றன. மேலும் இதில் மிகப் பிர பல்யமான இணையத்தளங்கள் பல்வேறு வகைளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. தளம் இன்னும் வடிவமைக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றது எதிர்காலத்தில் சிறந்த களியாட்டத்தளமாக விளங்குவதற்கான வாய்ப்புக்கள் உண்டு

கூகிள்தமிழ்

2.கூகிள்தமிழ்.கொம் (www.googletamil.com)

இணையத்தில் சிறந்த தேடுபொறி கூகிள்.கொம் அதுபோல சிறந்த தமிழ் தேடுபொறியாக கூகிள்தமிழ்.கொம் விளங்குகிறது நீங்கள் தமிழில் தேடவேண்டும் எனில் இத்தளத்தில் உள்ள "பாமினி" என்ற தெரிவை தெரிவுசெய்து தட்டச்சு செய்து தேடலாம்

அல்லது ஆங்கில உச்சரிப்புத்தமிழில் தேடுவதாயின் Romanized என்பதை தெரிவுசெய்து உதாரணமாக ammaa என தட்டச்சு செய்து தேடினால் அம்மா என்பதற்கான தேடுதல் முடிவுகள் உங்களுக்கு கிடைக்கும் இத்தளத்தினை ஸ்பீட் ஐ.ரி.நெற் நிறுவனத்தினரே உருவாக்கி உள்ளனர். இணைய உலகில் தமிழைத்தேட கூகிள் தமிழுக்கு செல்லுங்கள்




3. மாலை.கொம் (www.maalai.com)


இணையத்தில் தற்போது திருமணத்தளங்களுக்கும் நண்பர்கள் உறவுத்தளங்களுக்கும் பஞ்சமில்லை. ஆயினும் முற்றிலும் தமிழ் மயப்படுத்தப்பட்ட தளங்கள் மேற்படி வகையில் காண்பது அரிது.யாழ்பாணத்தில் இருந்து இதற்கு தீர்வு எட்டப்பட்டிருக்கின்றது என்றால் நம்பமுடியவில்லை அல்லவா? ஆனால் இது உண்மை முற்றுமுழுதாக தமிழில் திருமண,நட்பு உறவுத்தளமான மாலை.கொம் யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டு இயங்கிவருகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

(நமது மென்பொருள்)


# அதிஸ்ட எண் கண்டுபிடிக்க...




நாம் இன்று அறிவியல் உலகில் இருந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் அதிஸ்டம், சாஸ்திரம் ,சம்பிரதாயங்கள் பற்றி அலட்டிக்கொண்டிருக்க முடியாது இருந்தபொழுதிலும் அறிவியலுக்கும் சோதிடக்கணிப்புக்களுக்கும் சில இடங்களில் ஒற்றுமை இருக்கத்தான் செய்கிறது. இன்று கணினி மூலம் சோதிடம் மற்றும் திருமணப்பொருத்தம் பார்க்கும் நடவடிக்கைகள் களை கட்டியிருக்கின்றன. சோதிட வல்லுனர்கள் தாம் கணிப்பதைவிட கணினியிடம் குறித்த கணிப்பீட்டு வேலைகளின் முறையினை கொடுத்து வைத்து கணித்தல்களை செய்வது துல்லியமானதாகவும் வழுவற்றதாகவும் இருப்பதாகவும் கருதுகின்றனர். அதைவிடுத்து கணினி தானாகவே சிந்திப்பதில்லை. சோதிடர்களின் உதவியுடன் கணினி மென்பொருள் வல்லுனர்கள் மென்பொருட்களை உருவாக்கிவிட இதனை சேதிடரல்லதவர்களும் பயன்படுத்தும் அளவுக்கு தகவல்தொழில் நுட்பம் வளர்ந்து விட்டது.

சரி நாம் விசயத்துக்கு வருவோம். நமது பெயர்கள் வியாபார நிலையத்தின் பெயர்களை வைக்கும்போது அதிஸ்ட எண்களில் வைக்கவேண்டும் என்பது ஐதீகம். இந்த வகையில் பெயர்களை வைக்க முற்படுகையில் நாம் பெயரில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் உரிய இலக்கங்களை ஒன்றாக கூட்டி இறுதி இலக்கத்தை கணிக்கிறோம் இது சலிப்பூட்டும் வேலையாகும். அப்படி கூட்டிப்பார்ப்பதில் உள்ள சிரமத்திற்காகவே நம்மவர் பலர் கருத்தே இல்லாத வேற்று மொழி பெயர்களை வைக்க முற்படுகிறார்கள். இதற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்கள் Speed IT net நிறுவனத்தினர். யாழில் முன்னணி மென்பொருள் வடிவமைப்பாளர்களாகிய இவர்கள் பெயர்களின் கூட்டு எண்களை கண்டறிய சிறிய மென்பொருளை வடிவமைத்திருக்கிறார்கள்

இம்மென்பொருளின் உதவியுடன் எந்த ஒரு பெயரினதும் கூட்டு இலக்கத்தினை அறிந்து கொள்ளலாம் பிறகென்ன இதனை Run செய்து விரும்பிய பெயர்களை இட்டு அவற்றின் கூட்டு எண்ணை அறிந்து உங்கள் அதிஸ்ட எண்ணுக்கான பெயரை தெரிவுசெய்யலாம். இம்மென்பொருள் Vembady.com/Download/ இல் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்யப்படலாம்




**My Computer** உடனான அனைத்துத் தொடர்புகளிற்கும்:
My Computer, 72/28, பணிக்கர் லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல்: mycomputer@speeditnet.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# கருத்துப்பெட்டி # # # # # # # #

சஞ்சிகையில் வெளிவருகின்ற படைப்புக்கள் பற்றி எழுதப்படும் கடிதங்களில் ஒன்று தெரிவு செய்யப்பட்டு அதை எழுதியவருக்கு 3 மாத இதழ்கள் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். உங்கள் கருத்துக்களை 077-7563213 என்ற இலக்கத்திற்கு **SMS** ஊடாகவும் அனுப்பலாம். (ஆ-ர்)










எமது பிரதேசத்தில் கணினிச்சஞ்சிகை இல்லையே என்ற குறையினை மைகொம்யூட்டர் தீர்த்துவிட்டது தொடர்ந்து வெளிவரவேண்டும் என பிரார்த்திக்கிறேன்

*-பி.வசந்தன் நல்லூர்-*

யாழில் தகவல்தொழில்நுட்பம் சம்பந்தமாக இப்படி ஒரு சஞ்சிகை வருவது எமக்கு கிடைத்த அரிய வாய்ப்பபு எக்சல் அக்சஸ் போன்றவை பற்றியும் கட்டுரைகள் வெளிவந்தால் தரம் 10 மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும்.இச்சஞ்சிகை மேலும் வளர என் வாழ்த்துக்கள் *-செ.அனுசுதன் கரணவாய்-*

நீங்கள் வெளியிடும் மைகொம்யூட்டர் நன்றாக இருக்கிறது.நகைச்சுவை விடயங்கள் கணினிச்சந்தை விலைகள் போன்றவற்றையும் பிரசுரித்தால் நல்லது

*- கோபிபிரசாத் உடுவில் கிழக்கு சுன்னாகம்-*

சஞ்சிகையின் வெளியீட்டு காலப்பகுதி குழப்பமாக உள்ளது இதற்கு ஒரு தீர்வை ஏற்படுத்துங்கள் மற்றப்படி சஞ்சிகையின் அனைத்து விடயங்களும் அசத்தல்.

*-பி.கோகிலா சாவகச்சேரி-*

சஞ்சிகையில் கைத்தொலைபேசித்தொழில்நுட்ப விடயங்கள் பற்றி கவனம்செலுத்த தொடங்கியிருக்கிறீர்கள் நல்ல திருப்பம் *உ.கார்த்திக் நெல்லியடி-*

நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியுமாக மைகொம்யூட்டர் தன்னை மாற்றி வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.நல்லமுயற்சி தொடர்ந்து வெளியிடுங்கள்

*-எம்.வானதி மானிப்பாய்-*

சிறந்த கருத்தைக்கூறி 3 மாத இதழ்களை பரிசாக பெறும் வாசகர்

-செ.அனுசுதன் கரணவாய்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கொம்யூட்டர்ஜீ யின் பதில்கள்

**சிறந்த Anti Virus வகை எது? Spy நீக்கியாக செயற்படக் கூடியது எது?**

தற்போது முன்னணி அன்ரிவைரஸ் மென்பொருள்களாக AVG,McAfee,Nortan/SymanTec,KasperKey போன்றவற்றினை பட்டியலிடலாம். எதுவாக இருந்தாலும் அதனுடைய சமீபத்திய பதிப்பை இட்டு அதனை நாளாந்தம் Update செய்யவேண்டும்.பெரும்பாலும் இவை அனைத்தும் ஒன்றுக்கொன்று சளைத்தவைகள் அல்ல. அநேக வைரஸ்களை அடையாளம் கண்டழிக்கின்றன. எது சிறந்தது என என்னைக்கேட்டால் நான் சொல்வேன் McAfee Enterprise என்றுதான். அது மிக இலகுவானது

**Internet இல் Chat பண்ணுவது எவ்வாறு? சற்று விபரமாகத் தரவும்?**

இணையத்தில் அரட்டை செய்வதற்கு என சிறு இணைய மென்பொருள் அவசியம். உதாரணமாக Yahoo, MSN, GTalk ஆகியவற்றை குறிப்பிடலாம். இவைதவிர பல தமிழ் இணையத் தளங்களில் அரட்டை செய்யவென பிரத்தியேக வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்நிலையில் Yahoo Messenger இல் அரட்டை செய்ய வேண்டும் எனில் Yahoo Messenger தற்போதய பதிப்பு நமது கணினியில் நிறுவப்பட்டிருக்க வேண்டும். மேலும் Yahoo இல் ஒரு கணக்கு உருவாக்கி பயனாளர் சொல் என்றழைக்கப்படுகின்ற Yahoo ID இனை பயன்படுத்தியே இதில் அரட்டை செய்யலாம் Yahoo Messenger இனை Open செய்து உங்கள் Yahoo ID மற்றும் கடவுச்சொல் கொடுத்து உள்நுழைந்து அதிலே உங்கள் நண்பர்களின் Yahoo ID களை சேர்க்க வேண்டும்.அதற்கு + என்ற குறியீட்டுடன் காணப்படுகின்ற Add Contact பட்டனை கிளிக்செய்வதன் மூலமோ அன்றி "மெனுபார்" இல் Meessenger→Add Contact என்ற ஒழுங்கில் கிளிக் செய்வதன் மூலமோ பெறப்படுகின்ற சாளரத்தினூடு நண்பரின் Yahoo ID இனை சேர்க்கலாம். இருந்த போதிலும் அது உடனடியாக சேர்க்கப்படமாட்டாது .நண்பர் தனது கணினியில் உங்களைப்போலவே உள்நுழையும்போது உங்களுடைய சேர்த்தல் முயற்சி பற்றி Message Box ஊடாக தெரியப்படுத்தப்படும் அதற்கு அவர் Allow Button இனை கிளிக்செய்து அனுமதி வழங்கினால் மாத்திரமே நண்பருடன் அரட்டை செய்யலாம்.

எது எவ்வாறாக இருந்தபோதிலும் நண்பரும் நீங்களும் ஒரேநேரத்தில் இணையத்தினூடு இல் Yahoo Messenger இல உள்நுழைந்திருத்தல் வேண்டும் மேற்சொன்னவாறு பல நண்பர்களை இணைத்தபின் அவர்கள் Online இற்கு வந்தால் அவர்களின் பெயர் முன்பாக மஞ்சள் நிற பொம்மை தெரியும் இல்லாதவேளை வெள்ளையாக இருக்கும். நண்பருடைய பெயரில் Double கிளிக் செய்தால் பெறப்படும் சாளரத்தில் உள்ள Text Box இல் தட்டச்சு செய்து Enter விசையினை அழுத்துவிதனூடாக அரட்டை செயலாம்.உங்கள் இருவருடைய உரையாடல்களும் ஒன்றன்பின் ஒன்றாக அந்த சாளரத்தின் மேற்பகுதியில் தெரிந்து கொண்டிருக்கும்.இணைய அரட்டை சம்பந்தமாக நிறைய விபரிக்கலாம் இவ்விடத்திற்கு அது பொருந்தாது.

***நான் எனது கணினியை Shutdown செய்யும் வேளைகளில் சில சமயங்களில் Restart ஆகின்றது.ஏன்? நிறுத்த வழிகள் உண்டா?***

***-வே.சேந்தன்,கொக்குவில்-***


கணினி நிறுத்தப்படும் போது ஏதாவது குழறுபடிகள் ஏற்படுமாயின் கணினி சட்டவுண் ஆகாமல் மீள இயங்க வாய்ப்பு உண்டு.அதனை தடுக்க பின்வரும் வழிமுறையினை கையாளலாம்

Desktop இல் My Computer இல் வலது கிளிக் செய்து பெறப்படும் மெனுவில் Properties உபமெனுவில் கிளிக்செய்தால் System Properties விண்டோ தோன்றும் இதிலே Advance பகுதியில் Startup and Recovery




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


என்பதன் கீழ் வரும் Setting பட்டனை கிளிக்செய்தால் பெறப்படும் விண்டோவில் System Failure பகுதியில் Automatic Restart என்ற தெரிவை நீக்கி விட்டு OK செய்தால் சரி. அதன்போது ஏதாவது செய்தி விண்டோ தோன்றினால் அதற்கு Yes என கொடுக்க வேண்டும்.




**எனது கணினியின் Desktop இல் காணப்படும் Shortcut பின் புலநிறத்தை இல்லாது செய்வதற்கு முயன்று களைத்துவிட்டேன் வழியேதும் சொல்வீர்களா?**
**-ம.காஞ்சனா,சு ர்டிக்குளி-**




Desktop இல் My Computer இல் வலது கிளிக் செய்து பெறப்படும் மெனுவில் Properties உபமெனுவில் கிளிக்செய்தால் System Properties விண்டோ தோன்றும் இதிலே Advance பகுதியில் Performance என்பதன் கீழ் வரும் Setting பட்டனை கிளிக்செய்தால் பெறப்படும் விண்டோவில Visual Effect பகுதியில் Use drop shadows for icons labels on desktop என்ற தரிவை ஏற்படுத்தி OK செய்யவேண்டும்.




**டிஜிரல் கமெரா மூலம் எடுத்த அல்லது Scan செய்யப்பட்ட படங்களை நான் மின்னஞ்சல் ஊடாக அனுப்ப செல்லும்போது படத்தின் Size இனை குறைத்து கொண்டுவாருங்கள் இல்லாவிட்டால் அனுப்பமுடியாது என்கிறார்கள்.எப்படி அளவை குறைப்பது?**
**-பி.வாசன் சாவகச்சேரி-**






Photo Shop Program இல் உங்கள் படத்தினை திறந்து Image மெனுவில் Image size என்ற உபமெனுவை கிளிக்செய்தால் பெறப்படும் விண்டோவில் Width அல்லது Height இனை மாற்றியபின் File மெனுவில் சென்று Save For web என்பதை கிளிக்செய்ய பெறப்படும் விண்டோவில் படத்தின் வகை(Jpeg/Gif/Png) மற்றும் தரம்(Quality) போன்றவற்றை மாற்றி சேமிக்கலாம் இதன்போது கீழ் இடது மூலையில் படத்தின் கொள்ளளவு தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.இதன் மூலம் அளவுகுறைந்த ஆனால் தரம் கூடிய படங்களாக சேமிக்கலாம்





கணினி உள்ளிட்ட தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமாக உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்ளை எமக்கு தபால் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவே அனுப்பிவையுங்கள் வல்லுனர்களிடம் பதிலைப்பெற்றுத் தருகிறார் கொம்பூட்டர்ஜீ.எமது மின்னஞ்சல் முகவரி: **mycomputer@speeditnet.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

( உதவித்துளிகள் )

## கணினியை வேறு ஒருவர் Open செய்யாது தடுக்க




நீங்கள் கணினியில் இயங்குதளத்தினை நிறுவும்போது ஒரு User name கேட்டு அதற்கு ஒன்று கொடுத்திருப்பீர்கள் அதற்கு கடவுச்சொல் பாதுகாப்பு இல்லாதிருக்கலாம் இந்தவேளையில் நீங்கள் தற்போது குறித்த Username இற்கு கடவுச்சொல் இடலாம் அத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட Username களை உருவாக்கி கடவுச்சொற்களை கொடுக்கும் அதேவேளை அவர்களுக்கு கட்டுப்பாட்டாளர் தகுதியையோ சாதாரண பயனாளர் தகுதியையோ வழங்கலாம். அவற்றில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கு கட்டுப்பாட்டாளர் தகுதியுடைய பயனாளராலேயே முடியும் என்பதையும் புரிந்து வைத்திருக்க வேண்டும் சரி இனி எவ்வாறு அவற்றினை செய்வதென்று பார்ப்போம். கணினியின் Control Panel பகுதியினுள் சென்று (Start--Control Panel) User Accounts இனை Click செய்து பெறும் சாளரத்தில் Change an account இல் Click செய்து எந்த User இற்கு கடவுச்சொல் கொடுக்கப்போகின்றீகளோ அதன் மீது Click செய்தால் கிடைக்கும் பகுதியில் Create a password என்பதன் ஊடாக விரும்பிய கடவுச்சொல் கொடுக்கலாம் அதுபோல் Create a new account என்பதன் ஊடாக புதிய User களை உருவாக்கலாம் Remove my password என்பதனூடாக கடவுச்சொல்லை நீக்கலாம்

## Hard disk ஐ Partition செய்வது எப்படி?

கார்ட் டிஸ்க்கை பகுதிகளாக பிரிப்பதற்கு பல வழிகள் இருக்கின்றன.Boot Disk,Bootable Operating System CD களை உபயோகித்தோ அன்றி Partion Magic போன்ற மென்பொருட்களை பயன்படுத்தியோ பகுதிகளாக பிரிக்கலாம். நான் Windows Xp Bootable CD யை பயன்படுத்தி பிரிப்பது பற்றி விளக்குகிறேன் Windows Xp Bootable CD இனை கணினியில் இட்டு கணினியை மீள இயக்கவும் CMOS Setup இல் முதலாவது Boot Drive ஆக CD ROM தெரிவு செய்யப்பட்டிருப்பின் CD இல் இருந்து கணினி இயங்க தொடங்குவதற்காக Press any key to boot from Cd என திரையில் கேட்டு நிற்கும். அவ்வேளை விசைப்பலகையில் ஏதாவது விசையினை அழுத்துவீர்களாயின் கணினி சீடி யில் இருந்து இயங்கும் ஒருகட்டத்தில் கணினியில் எந்த டிறைவரில் ஒப்பறேட்டிங் சிஸ்டத்தினை நிறுவுவது என கேட்கும்.அவ்வேளை வேறு விடயங்களும் கேட்கப்படும்

புதிய பிரிப்பு ஒன்றை பிரிப்பெதுவும் செய்யப்படாத கார்ட் டிஸ்க்கில் ஏற்படுத்துவதற்கு C என்ற விசையினையும் அல்லது பிரிப்பு ஒன்றை இல்லாது அழிப்பதற்கு D என்ற விசையினையும் அழுத்துமாறு கேட்கப்படுவீர்கள். ஏற்கனவே பிரிப்பு செய்யப்பட்ட கார்ட்டிஸ்க் ஒன்றில் இவற்றை அழித்து புதிய விதத்தில் பிரிக்கப்போகிறீர்களாயின் அவற்றை ஒவ்வொன்றாக விசைப்பலகை மூலம் தெரிவுசெய்து முதலில் D இனையும் பின்னர் L இனையும் இறுதியில் என்டர் விசையினையும் அழுத்துவீர்களாயின் குறித்த பிரிப்பு அழிக்கப்பட்டு விடும்.இவ்வாறு எல்லா பிரிப்புக்களையும் நீக்கிவிட கார்ட் டிஸ்க் பிரிப்பு செய்யப்படாததாகிவிடும்

இப்போது புதிதாக பிரிப்பு ஒன்றை மேற்கொள்ள பிரிப்பு செய்யப்படாத பகுதியை விசைப்பலகை மூலம் தெரிவு செய்து முதலில் C என்ற விசையினை அழுத்தி பின்னர் இதில் ஒதுக்கப்படவேண்டிய கொள்ளளவை ரைப் செய்து என்டர் விசையினை அழுத்த புதிய பிரிவு உருவாக்கப்பட்டுவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

(மென்பொருள் பாவனை)


# ஓஃபீஸ் 2007 உம் 2003 யும் .....

நாம் புதிதாக எந்த மென்பொருள் வந்தாலும் அதை எமது கணினியில் நிறுவி பயன்படுத்த விரும்புவது இயல்பானதே. அதேபோல் ஒரு மென்பொருளின் புதிய பதிப்பு வெளிவந்தாலும் விடுவதில்லை முன்னையதை அகற்றி புதியதை போடவேண்டும் என அடம் பிடிப்போம்.

இந்நிலையில் நமது கணினிகளில் தவறாது இடம்பிடித்தக்கொள்கின்ற மைக்ரோசொப்ட் ஒபீஸ் (Microsoft Office) மென்பொருள் தொகுப்பில் அண்மையில் வெளிவந்த Microsoft Office 2007 பற்றி சற்று கவனம் செலுத்துவோம். புதிய பதிப்பு பற்றிய விரிவான தகவல்களை அடுத்த தடவை பார்க்கலாம். இம்முறை ஏற்கனவே புதிய பதிப்பை தமது கணினிகளில் நிறுவியுள்ள பயனாளர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டியவிடயத்தினை பார்க்கலாம்

சாதாரணமாக முன்னைய பதிப்புக்களில் *(2003 வரை)* உள்ள Word ,Excel,Access, Powerpoint கோப்புக்களை சேமிக்கும்போது அவை முறையே. .doc , .xls , .mdb, .ppt என்ற Extension களில் (கோப்பு வடிவம்) சேமிக்கப்படும். ஆனால் Office 2007 இல் அவ்வாறில்லை ஒவ்வொரு Extension களுடனும் X சேர்ந்து .docx , .xlsx , .mdbx, .pptx என முறையே சேமிக்கப்படும்

இதில் என்ன இருக்கின்றது என நீங்கள் கேட்கக்கூடும். பிரச்சனை இங்கு தானே இருக்கிறது. நீங்கள் சாதாரணமாக 2007 இல் சேமித்த கோப்பு ஒன்றை இன்னும் ஒரு கணினியில் திறப்பதாயின் இக்




கணினியியில் Office 2007 நிறுவப்பட்டிருக்கவேண்டும். இல்லையென்றால் திறக்கமுடியாது. அப்படியாயின் என்னதான் வழி? இதுகேள்வி ! நீங்கள் சேமிக்கும்போது வரும் சாளரத்தில் Save as type பகுதியில் பழைய பதிப்பாக சேமிப்பதற்கான தெரிவை மேற்கொள்ள வேண்டும். உதாரணமாக Word கோப்பினை சேமிக்கும்போது Word 97-2003 என்ற தெரிவை மேற்கொள்ள வேண்டும்

சரி முன்னரேயே இது தெரிந்தோ தெரியாமலோ Office 2007 இல் சேமித்து விட்டால் என்ன செய்வது மாற்றமுடியாதா? நிச்சயமாக முடியும்! இதற்கு Office 2007 நிறுவப்பட்ட கணினி தான் அவசியம். அதிலே குறித்த கோப்பினை திறந்து மெனு பகுதியில் Save as ஊடாக சென்று மீள மாற்றி சேமிக்கலாம். அதன்போது புதிதாக பழைய பதிப்புடன் கோப்பு சேமிக்கப்படும் இதனை எந்தக்கணினியிலும் திறந்து கொள்ளலாம்! பிரச்சனை தீர்ந்ததல்லவா?..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கணினியிலே இனிய தமிழ்

நாம் கணினியில் தட்டச்சு செய்யும் போதும் உள்ளீடுகளை வழங்கும் போதும் எழுத்துருக்கள் அதாவது ஃபொன்ட்களின் (Font) உபயோகத்தை காண்கின்றோம் ஒவ்வொரு மொழியிலும் பல வடிவங்களில் இந்த எழுத்துருக்கள் காணப்படுகின்றன. உதாரணமாக தமிழில் பாமினி, நல்லூர், சிந்துபைரவி, நாகநந்தினி, ஆனந்தபைரவி, அடங்காப்பிடாரி, என நூற்றுக்கணக்கான வடிவங்களில் எழுத்துருக்கள் காணப்படுகின்றன.

இந்த எழுத்துருக்களின் உதவியினால் தான் பல புத்தகங்கள், இணையத்தளங்கள் வடிவமைக்கப்படுகின்றன. அனைத்துப் பயனாளர்களும் தமது கணினியையோ இணையத்தளத்தினையோ உபயோகிக்கும்போது தமது மொழியில் அறிவுறுத்தல்கள் உள்ளடக்கங்கள் இருக்கும் போது மகிழ்வார்கள் என்பது தெரிந்த விடயம்.

இந்நிலையால் உங்களை நிறுத்தி கணினியின் எழுத்துக்கள் எவ்வாறு சேமிக்கப்படுகின்றன.'. கையாளப்படுகின்றன என்ற விடயத்துக்கு அழைத்துச்செல்கின்றேன். உண்மையில் விசைப்பலகையில் (Key Board) விசைகளை அழுத்தும் போது குறித்த விசைக்குரிய எழுத்து நேரடியாக கணினியில் உள்ளிடப்படாது. மாறாக அந்த விசைக்குரிய ASCII இலக்கம் தான் உள்ளிடப்படும். அது அவ் வேளை உபயோகப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் எழுத்துருவிற்கு ஏற்ப திரையில் வடிவம் பெறுகிறது.

ஆங்கில எழுத்துரு ஒன்று தெரிவு செய்யப்பட்டிருக்கும் கணத்தில் 'A' என்ற விசையினை அழுத்தின் 97 என்ற ASCII பெறுமானமே இரட்டை அடி என்னாக (Binary) கணினிக்கு வழங்கப்படும் அது திரையினூடாக 'A' யாக தெரியும் பாமினி என்ற தமிழ் எழுத்துரு தெரிவு செய்யப்பட்டிருப்பின் 'ய' என்று தெரியும் எமக்கு திரையில் தெரிகின்ற வடிவம் தெரிவுசெய்யப்பட்ட எழுத்துருவிற்கேற்ப ஒவ்வொரு வடிவில் தெரிந்ததே தவிர அதனுடைய உண்மைப் பெறுமானம் 97 மட்டுமே.

விசைப்பலகையில் உள்ள ஒவ்வொரு விசைக்கும் ஒவ்வொரு ASCII பெறுமானம் உண்டு. இந்த நிலையில் **WELCOME** என்ற சொல் தட்டச்சு செய்யப்பட்டிருக்கின்றதாயின் அது ஆங்கில எழுத்துரு தெரிவு செய்யப்பட்டிருக்கும் வரையில் மட்டுமே அவ்வாறு தெரியும் அதனை தமிழ் எழுத்துருவிற்கு மாற்றிவிட்டோம் எனில் அது **' றுநுடுஊழுஆநு'** என்று தெரியும். இவ்வாறு தமிழ் எழுத்துரு தெரிவு செய்யப்பட்டிருக்கையில் "வணக்கம்" என தட்டச்சு செய்யப்பட்ட சொல் ஆங்கில எழுத்துரு ஒன்றிற்கு மாற்றும் போது **'tzf;fk;'** எனத் தெரியும்

ஆகவே குறித்த எழுத்துருவை தெரிவு செய்துவிட்டு நாம் தட்டச்சு செய்தவை அனைத்தும் அதே எழுத்துருவோ அல்லது அது சார்ந்த எழுத்துருவோ தெரிவு செய்யப்பட்டால் மாத்திரமே விளங்கிக் கொள்ளமுடியும். நாம் பாமினி என்ற தமிழ் எழுத்துருகொண்டு தட்டச்சு செய்ததை பாமினி எழுத்துருவோ அன்றி அது சார்ந்த வேறு ஒரு தமிழ் எழுத்துருவோ இன்றி வாசிக்கமுடியாது..இது சில காலங்களுக்கு முன்னர் பெரும்பிரச்சனையாகத்தான் இருந்தது இப்போ அதற்கு தீர்வுகிடைத்து விட்டது. அதுதான் 'யுனிகோட்' எழுத்துரு.

இந்த யுனிக்கோட் எழுத்துரு சம்பந்தமான பொதுவான முடிவுகள் யாவும் யுனிக்கோட். கொன்சட்டேறியம் என்ற அமைப்பினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் அங்கீகரிக்கப்படும் விதிமுறைகளை மென்பொருள் மற்றும் கணினி நிறுவனங்கள் ஏற்றுக்கொள்கின்றன. இவர்களினால் ASCII இலக்கங்கள் **A-Z, a-z** ஆகிய ஒவ்வொரு எழுத்துக்களுக்களுக்கும் இருந்தது போன்று ஒவ்வொரு மொழியில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்களுக்கும் தனித்தனியாக வழங்கப்படுகின்றன. அதற்காக ஒருமொழியில் உள்ள எல்லா எழுத்துக்களுக்கும் முற்று முழுதாக இலக்கங்கள் ழங்கிவிடமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதற்கு சில யுத்திகள் கையாளப்படுகின்றன. அதாவது தமிழில் உள்ளதுபோல் விசிறி எழுத்துக்களுக்காக குறித்த எழுத்துடன் விசிறியை சேர்த்து விசிறி எழுத்தை பெற்றுக் கொள்வதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.உதாரணமாக ( ப+ ி ) = பி

தமிழ் மொழிக்கென இவ்வமைப்பினால் 2946 தொடக்கம் 3071 வரை இலக்கங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதற்கான பரிந்துரைகள் உத்தமம் (INFITT), தமிழ்நாடு அரசு ICTA Srilnka என்பன வழங்கிவருகின்றன. தமிழ் மொழி எழுத்துக்களுக்கென கிடைத்தது மாதிரி சிங்கள மொழிக்கும் அவர்களின் எழுத்து களுக்கென 400 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான இட ஒதுக்கீட்டில் எமது தமிழ் மொழிக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் போதாது என்ற சாரப்பட்ட சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.இது நிற்க இன்று உலகளாவியரீதியில் அநேக மொழிகளின் எழுத்துக்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடப்பிடத்தக்கது. இங்கு ஒரே பிரச்சனை எல்லா மொழிகளின் எழுத்துருக்களுக்கும் இடம் ஒதுக்கப்படும் போது எழுத்துருவின் கொள்ளவு அதிகரிக்கப்பட வாய்ப்புண்டு. என்பதாகும்.

இந்நிலையில் விசைப்பலகையில் 2946 என்ற இலக்கப்பெறுமதி உடைய விசை அழுத்தப்பட்டிருப்பின் அதற்குரிய எழுத்து வடிவம் மாத்திரமே திரையில் தெரியும் ஆங்கில யுனிகோட் எழுத்துருவாக இருந்தால் என்ன தமிழ் யுனிகோட் எழுத்துருவாக இருந்தால் என்ன குறித்த இலக்கத்துக்கு என்ன எழுத்து வடிவம் இருக்கின்றதோ அதுவே திரையில் தெரியும்.

முன்பெல்லாம் தமிழ் எழுத்துருவில் 65 என்ற இலக்கப் பெறுமதியில் யு என்ற எழுத்து இருந்தது ஆங்கில எழுத்துருவில் **'A'** என்ற எழுத்து இருந்தது. ஆனால் இப்போது எல்லாயுனிகோட் எழுத்துருக்களிலும் குறித்த இடத்தில் **'A'** இருக்கும் 2949 என்ற இடத்தில் **'அ'** என்பதே இருக்கும். வெவ்வேறு யுனிகோட் எழுத்துருக்களில் அவை கொண்டுள்ள எழுத்துக்கள் கொண்டுள்ள வடிவம் (ஸ்ரைல்) மாறி இருக்குமே தவிர குறித்த இலக்கத்துக்கான எழுத்து மாறியிராது.





இந்நிலையில் **'Hello அம்மா'** என்பதை நாம் யுனிகோட் எழுத்துரு மூலமாக தட்டச்சு செய்து இணைய தளத்தில் (வெப்சைட்டில்) போட்டிருந்தால் குறித்த யுனிக்கோட் எழுத்துரு கணினியில் இல்லாவிட்டாலும் வேறு ஒரு யுனிக்கோட் எழுத்துரு மூலமாக தானாகவே வாசிக்கக்கூடியதாக இருக்கும். முன்பு எழுத்துருவை மாற்றும் போது எல்லாம் ஒவ்வொரு சொல்லுக்கும் அவை கொண்டுள்ள எழுத்துருக்களுக்கு ஏற்ப தனித்தனியாக மாற்ற வேண்டியிருந்தது. ஆனால் இப்போது அப்படியல்ல தானாகவே எல்லாம் தனியாகத் தெரியும் அப்படியானால் **Hello** அம்மா விற்கு என்னென்ன விசைகள் அழுத்தப்பட்டிருக்கக் கூடும்?. 72, 101, 108, 108, 111, 2949, 2990, 3021, 2990, 3006 என்பனதாம்.

சரி இப்படி யுனிக்கோட்டில் உள்ளிட்டால் தெரியும். எப்படி உள்ளிடுவது சாதாரணமாக விசைப் பலகையில் சுமார் 105 விசைகள் இருக்கும் இங்கே 2949 இனை எங்கே தேடுவது? இதற்கு வழிசொல்ல விசைப்பலகை கட்டுப்படுத்தல் மென்பொருட்கள்(Software) உள்ளன. அவை விசைகளை விரும்பியவாறு குறித்த எண்ணில் இருந்து குறித்த எண் வரையிலானவையாக மாற்ற வழிவகுக்கும் அவற்றை கணினியில் நிறுவினால் 2946 தொடக்கம் 3071 வரையிலான தமிழ் எழுத்துகளுக்குரிய எண்பெறுமானங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




விரும்பிய வேளையில் கொடுக்கமுடியும். அத்துடன் நீங்கள் விரும்பிய விசைப்பலகை வடிவமைப்புக்கும் (Layout) மாற்றிக் கொள்ள முடியும். அதாவது பாமினி அல்லது Tamil99 ஒழுங்கில் உங்கள் விசைகளை மாற்ற முடியும் பின்னர் தட்டச்சு செய்தால் அவை யுனிகோட் எழுத்துக்களாக திரையில் தெரியும்.

இந்த யுனிகோட் எழுத்துருக்களுக்கு Windows 98/95/me ஆகியன ஒத்திசைவாக்கம் பெறுவதில் சில சிக்கல்கள் உள்ளன. எனினும் அவற்றுக்கு தீர்வுகள் உள்ளன. ஆயினும் பின்னர் வந்த அநேக இயங்கு தளங்கள்(ஒப்பரேட்டிங் சிஸ்டங்கள்) இந்த யுனிக்கோட் எழுத்துருவுக்கு ஒத்திசைவாக்கம் பெற்றிருக்கின்றன. Microsoft நிறுவனத்தினர் தமது புதிய வின்டோஸ்XP, வின்டோஸ்2000 களில் லதா என்ற தமிழ் யுனிகோட் எழுத்துருவை சேர்த்துவருகின்றனர்.

எது எப்படியாயிருந்தபோதும் எமது கணினிகளில் யுனிகோட் வாசிப்பதற்கு என பிரத்தியேகமான சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிடில் யுனிகோட் எழுத்துக்கள் பெட்டி பெட்டி எழுத்துக்களாக தெரிவதற்கு வாய்ப்புண்டு இதற்கு **Windows XP** இல் செய்யவேண்டிய ஏற்பாடு வருமாறு **Control panel** இற்குள் சென்று **Regional and Language Option** இன்மீது இரட்டை சொடுக்கல் செய்து, தோன்றும் சாளரத்தின் **Language** என்ற **Tab** இனை சொடுக்கி அங்கு **Install files for Complex script and right – to-Left – Language (including Thai)** என்பது தெரிவு செய்யப்பட்டிருக்கின்றதா என அவதானிக்க வேண்டும். இல்லை எனில் அதனைத் தெரிவு செய்து, **OK** என அழுத்தினால் வின்டோஸ் சீடியினைத் தருமாறு கணினிகேட்கும் நீங்கள் அதனை **CD ROM** ல் இட்டு விட தேவையான மாற்றங்கள் நடைபெற்று **Restart** ஆகும். இப்போது யுனிக்கோட்டுக்கு ரெடியாகி விட்டது உங்கள் கணினி.

இன்னும் ஒரு முக்கிய விடயம், விசைப்பலகையில் உள்ளிடும் போதே யுனிக்கோட் எழுத்துருக்களாக தட்டச்சு செய்வது பற்றி பார்த்தோம் எனினும் அவ்வாறு செய்யாமல் சாதாரணமான எழுத்துருவில் தட்டச்சுசெய்து பெற்றதையோ அன்றி வேறு எழுத்துருக்களில் வடிவமைக்கப்பட்ட இணையத்தளங்களில் இருந்து பெற்றவற்றையோ சில 'மாற்றிகள்' **(Converters)** கொண்டு யுனிகோட்டிற்கு மாற்றமுடியும். இந்த மாற்றிகளை நாம் **www.jaffnalibrary.com/tools** மற்றும் **www.suratha.com** போன்ற இணையத்தளங்களில் பெற்று அதனை சேமித்து வைத்து இணைய தொடுப்பின்றியே பின்னர் மாற்றிக் கொள்ள முடியும். இதற்கு **Murasu.com** இல் பெற்றுக் கொள்ளக்கூடிய முரசு அஞ்சல் மென்பொருளையும் உபயோகப் படுத்தலாம். யுனிகோட் சம்பந்தமான மென்பொருட்கள் ,மாற்றிகள், எழுத்துருக்கள் பற்றியும் அவற்றின் உபயோகம் பற்றியும் இன்னொரு கட்டுரையில் ஆராய்வோம்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கணினிக் கிண்டல்கள்

"என் பெயர் டேவிட் அது
பழைய பெயர் மாதிரி
இருந்துது அதுதான் டிவிடி
என்று சுருக்கி வைச்சிட்டன்"



## Perfume

"என் கணவரின் கவனத்தை
கவர வேணும் கணினி
மாதிரியான வாசனையுடன்
ஏதாவது பேர்ஃபியூம்
உள்ளதா?"



"அன்புள்ள அருண் நலமா
என் அம்மாவும் நானும்
நலமாக உள்ளோம் என்
கணினியை மூடி விட்டு
கீழிறங்கி வந்து சாப்பிடு -
அன்புடன் அப்பா "





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ‘நீ எங்கே... நான் அங்கே!’

தொழில்நுட்பம் புதுசு

பெயர் என்பது நமக்கு எப்படி ஒரு அடையாளமோ அதுபோலவே பொருட்களையும் பல விதங்களில் அடையாளப்படுத்தி வருகிறோம். அதில் ஒன்றுதான் ‘பார் கோட்’ (Bar code) முறை. இன்றைக்கு நாம் வாங்கும் பல பொருட்களின் உறைகளில், கறுப்பு வெள்ளையில் பட்டி பட்டியாகக் கோடுகள் போட்டு ஒவ்வொரு பட்டிக்கும் கீழே ஒரு இலக்கம் அச்சடிக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அந்த பட்டிகள்தான் ‘பார் கோட்’ என்பது. இந்த முறையில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு குறிப்பிட்ட எண்ணைக்கொண்டு அடையாளப்படுத்துகிறார்கள். அதுபோக அப்பொருள் தயாரிக்கப்பட்ட மாதம், ஆண்டு, விலை போன்ற அனைத்து விவரங்களும் பதிய வைக்கப்படுகிறது.

கடைகளில் நாம் பொருட்களை வாங்கும்போது, இந்த ‘பார் கோட்’ ஐ கணினி மூலமாக ஸ்கான் செய்து பில் போடுவார்கள். இது ஒரு எளிமையான முறைதான் என்றாலும், இதிலும் சில சங்கடங்கள் உள்ளன. ஸ்கானருக்கு நேராக ‘பார் கோட்’ வந்தால்தான், அதில் உள்ள விலை விவரம் கணினியில் ஏறும். பார் கோட் எங்காவது வளைவான பகுதியில் போய் மாட்டிக்கொண்டிருந்தால், ஸ்கானர் அதைப் படிக்காது. அல்லது இந்த ‘பார் கோட்’ அழுக்குப் படிந்திருந்தாலோ, அல்லது நைந்து போயிருந்தாலோ ஸ்கானரால் படிக்க முடியாது.

இப்படி பிரச்சனைகள் தொடர்ந்ததால், இதற்கு மாற்றாக மற்றொரு டிஜிட்டல் தொழில்நுட்ப வழியைக் கண்டுபிடித்தார்கள். இரண்டாம் உலகப் போர் காலங்களிலிருந்து பயன்பட்டு வரும் ஒரு தொழில்நுட்பத்துக்குப் பெயர் ‘வானொலி மீடிறன் அடையாளப்படுத்தல் தொழில்நுட்பம்’ (RFID - Radio Frequency Identification). இந்தத் தொழில்நுட்பம்




இப்போது மீண்டும் பயங்கரமாக பிரபல்யமாகி ஆகிவருகிறது.

ஆர்.எஃப்.ஐ.டி. என்பது வானொலி அலைகளைக் கொண்டு ஒரு பொருளையோ, மனிதரையோ கண்டு பிடிக்கும் தொழில்நுட்பம். ‘ஆர்.எஃப்.ஐ.டி. பட்டி’ (RFID Tag) என்று சொல்லப்படும் சின்ன பட்டியை, பொருட்களைத் தயாரிக்கும்போதே அதனோடு வைத்து உருவாக்கிவிட்டால் போதும்... அதன்பிறகு அந்தப் பொருள் எங்கே இருந்தாலும் கண்டுபிடித்துவிடலாம். இதற்கு அழிவே கிடையாது.

இந்த ‘ஆர்.எஃப்.ஐ.டி. ராக்’ என்பது ஒரு குட்டிக்கணினி. அதில் ஒரு டிரான்ஸ் ரிசீவரும் அன்ரெனாவும் இருக்கும். அதன் தகவல்களைப் படிக்க, தனியே ஒரு வாசிப்பானும் இருக்கும். இதன் பயன்கள்தான் இன்று பிரமிக்கத்தக்க வகையில் அதிகமாகிக்கொண்டு வருகிறது.

சரக்கு ஏற்றுமதி, இறக்குமதித் துறையில் இது ஒரு வரப்பிரசாதம். சர்வதேச அளவில் சரக்குகளைக் கையாளும் கூரியர் நிறுவனங்களான டி.எச்.எல், ஃபெடெக்ஸ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யு.பி.எஸ். போன்ற நிறுவனங்கள், தாங்கள் எடுத்துக்கொள்ளும் பொருட்களில் இந்தப் பட்டிகளை ஒட்டிவிடுகின்றன. இதை வைத்து, அந்த பொருட்கள் எங்கே இருக்கின்றன என்பதை எளிதாகக் கண்டுகொள்ள முடியும்.

அதேபோல் விமானநிலையங்களில் பயணிகளின் உடைமைகளைப் பாதுகாப்பதிலும் இந்த முறை மிகவும் உபயோகமாக இருக்கிறது. பொதுவாக, விமானநிலையங்களில் பெட்டிகள் காணாமல் போவது அல்லது தவறுதலாக வேறொரு விமானத்தில் மாறிப் போய்விடுவது என்பதெல்லாம் சகஜமானதுதான். இந்தப் பிரச்னைகளைத் தடுக்கவும் இந்த பட்டி தொழில்நுட்பம் பயன்படுகிறது. கொங்கொங் விமானநிலையத்தில் மிகப்பெரிய அளவில் இந்தத் தொழில்நுட்பம் பயன் படுத்தப்படுகிறது.

வழக்கம்போல் எல்லா எதிர்ப்புகளையும் மீறி, அனைத்துத் துறைகளிலும் சிறகை விரித்திருக்கிறது இந்த ஆர்.எஃப்.ஐ.டி பட்டி! நாங்கள் சாதாரண பார்கோட்டினைக்கூட நமது உற்பத்திப்பொருட்களில் பதிக்க திராணியற்று கண்துடைப்புக்காக பார்கோட் போன்று அச்சடித்த லேபல்களை பயன்படுத்துவதை நினைத்துப்பாருங்கள்

மருந்து தயாரிப்புத் துறையிலும் இதன் பயன்பாடு மிக முக் கியமானது. மருந்துகள் தயாரிக்கப்படும் போதே இந்த 'ஆர்.எஃப்.ஐ.டி. பட்டி' பொருத்தப்படுவதை வைத்து, குறிப்பிட்ட மருந்து உரிய நிறுவனத்தின் தயாரிப்புதானா அல்லது போலியாகத் தயாரிக்கப் பட்டதா என்பதை சுலபமாகக் கண்டு பிடித்துவிடலாம்.

பல கார் தயாரிப்பு நிறுவனங்களும் தங்களது உதிரி பாகங்களில் இந்த முறையைப் பின்பற்றுகின்றன. மருத்துவத் துறையிலும் இது பயன்படுகிறது. நோயாளிகளின் கையில் கடிகாரம் போன்றோ, தோளில் மாலை போன்றோ இந்த பட்டிகளைத் தொங்கவிட்டு விடுகிறார்கள். மருத்துவமனைக்குள் அவர்கள் எங்கே போனாலும் வந்தாலும், இந்த பட்டிகள் மூலம் கண்டுபிடித்து விடலாம்.

அவ்வளவு ஏன், வீட்டைப் பூட்டுவதிலும்கூட இது மிகவும் பயன்படுகிறது. 'மைகீ 2300' என்ற பட்டி பொருத்தப்பட்ட சாவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வழக்கம் போலவே வீட்டைப் பூட்டிவிட்டுப் போகலாம். திரும்ப வந்து பூட்டை மீண்டும் திறக்கும்போது, இந்த பட்டியை அதன் முன்னால் காண்பித்தாலே போதும். தானாகவே திறந்துகொள்ளும்.


கிரெடிட் கார்டுகளிலும்கூட இதைப் பயன்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். வெளிநாட்டில் இப்படி பட்டி பொருத்தப்பட்ட ஒரு கிரெடிட் கார்டை சிட்டி வங்கி அறிமுகப்படுத்தியிருக்கிறது. இதன் மூலம் கார்டை தேய்ப்பது, பில்லில் கையெழுத்துப் போடுவது போன்ற தொல்லைகள் எல்லாம் இருக்காது. ஆர்.எஃப்.ஐ.டி வாசிப்பானில் நாமே கார்டை நீட்டினால் போதும். தானாகவே விவரங்கள் ஏற்கப்பட்டு விடும். இந்த ஆர்.எஃப்.ஐ.டி பட்டியை எவ்வளவு சின்னதாக வேண்டுமானாலும் செய்யலாம். இதை அரிசி அளவில் சின்னதாகச் செய்து, மிருகங்களின் உடலிலும் மனித உடலினுள்ளும் வைத்துவிடலாம். மாடுகளின் தோலில் இந்த பட்டியை வைப்பது இப்போது புழக்கத்தில் இருக்கிறது. இதன்மூலம் மாடு எங்கே மேயப் போனாலும், அதைக் கண்டுபிடித்துவிட முடியும். பெரிய மாட்டுப் பண்ணைகளில் இந்த முறை பயன்பாட்டில் இருக்கிறது.

மாடுகளின் தோலில் 'டாக்' வைக்கலாம்...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



அதேபோல், வளர்ப்பு நாய்களுக்கும் பயன்படுத்துகிறார்கள்.

இந்த ஆர்.எ∴ப்.ஐ.டி. பட்டிகள்கள் என்பவை, நமக்கு வைக்கப்படும் பெயர் போல் நிரந்தர அடையாளம் உடையவை... இதற்கு மரணம் என்று ஒன்று கிடையாது! எப்போதும் இந்தப் பொருள் தன் இருப்பைத் தெரிவித்துக் கொண்டே இருக்கும். 'நான் இங்கே இருக்கிறேன். இந்தப் பெயர் என்னுடையது. என் எண் இதுதான்' என்று சதா உயிர்ப்போடு இருக்கும். இதனால் ஒரு பொருளை வாங்குபவரின் தனிப்பட்ட வாழ்வை, அந்தப் பொருளைக் கொண்டே வேவு பார்த்துவிட முடியும் என்ற அச்சமும் தோன்றத் தொடங்கியது.

இப்போது இதற்கும் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலம், ஒரு பொருளைக் கடையில் வாங்கும் வரைதான் அதில் பொருத்தப்பட்டுள்ள ஆர்.எ∴ப்.ஐ.டி க்கு உயிர் இருக்கும். கடைவாசலைத் தாண்டும்போது வாசலில் உள்ள ஒரு சின்ன வாசிப்பான், பட்டியை செயலிழக்கச் செய்துவிடும். இதன்மூலம், தனிநபர்களின் வாழ்வில் இந்த பட்டிகள் மூக்கை நுழைக்காமல் இருக்கவைக்க முடியும்






# பேசுங்க... பேசுங்க... பேசிக்கிட்டே இருங்க!

-மூலம்: டிஜிரல் யூனியர் விகடன்-

'டிஜிட்டல் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் எல்லாம் மக்களுக்கானது. மக்கள் வளர்ச்சிக்கானது. பயன்பாட்டுக்கானது. அதை சேவை மனப்பான்மையோடு உருவாக்க வேண்டும். இலவசமாகப் பயன்படுத்த அளிக்க வேண்டும். மாறாக, அதைக்கொண்டு வணிகம் செய்யக்கூடாது என்பது இணையத்தில் ஒருசாராரின் கருத்து. இவர்கள்தான் 'ஓபன் சோர்ஸ்' என்று சொல்லப்படும் திறந்த ஆணைமூல இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் உருவாக்கும் எண்ணற்ற செயலிகள், மக்களின் பயன்பாட்டுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. 'அடிப்படை தொழில்நுட்பமும், சேவையும் இலவசமாக இருக்க வேண்டும். அதற்கு மேல் உருவாக்கப்படும் உபவசதிகள் வேண்டுமானால் சந்தைப் படுத்தப்படலாம்' என்பது இவர்கள் கருத்து.

எதுக்கு இவ்வளவு பீடிகை... சட்டென்று விசயத்துக்கு வர வேண்டியதுதானே என்கிறீர்களா? வந்து விட்டேன்! ஒருகாலத்தில் தொலைபேசி ஊரையே இரண்டு படுத்திக் கொண்டிருக்க... அதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் காலி செய்தபடி இப்போது எங்கெங்கும் செல்போன் (அலைபேசி ?) விஸ்வரூபம் எடுத்துக்கொண்டுள்ளது. இந்த செல்போனுக்கும் வேட்டுவைக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை! ஒரு தொழில்நுட்பம் அடுத்தொன்றைக் கபளீகரம் செய்துவிட்டு, மேலே மேலே என்று முன்னேறிக்கொண்டே இருக்கிறது. அதில் முக்கியமானது 'வொய்ஸ் ஓவர் ஐ.பி.' (Voice Over IP) எனப்படும் 'வி.ஓ.ஐ.பி.' சேவைகள்.

பொதுவாக போன்களில் நாம் பேசினோமென்றால் அது வயர் மூலம் பிரதான பரிமாற்று நிலையம் போய், அங்கிருந்து அடுத்ததொரு பரிமாற்று நிலையம் போய், கடைசியில் நாம் கூப்பிடும் நபரின் தொலைபேசிக் கருவியைப் போய் அழைக்கும். இது சாதாரண



தொலைபேசியின் செயல்பாடு. இந்த வயர் தொடர்பில்லாமல் உருவானதுதான் செல் போன். எங்கேயிருந்தாலும் பேசிக் கொள்ளலாம் என்று செல்போன் சேவை மக்களைக் கவரத் தொடங்கியது.

இந்த இரண்டு வகை இல்லாமல், மூன்றாவதாக இருப்பதுதான் VOIP. இணையத்தில் ஒவ்வொரு கணினியையும் புரிந்துகொள்ள ஒரு தனி எண் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு 'ஐ.பி. முகவரி' என்று பெயர். இப்போது இணையம் வழியாக ஈ-மெயில் அனுப்ப முடிகிறது, பெற முடிகிறது. செய்திகளைப் பரிமாறிக்கொள்ள முடிகிறது.

அதுபோல குரலைப்பறிமாறிக்கொள்ளவும் முடியும். அப்படி, ஐ.பி. முகவரிகளின் வழியாகக் குரல் பரிமாறிக் கொள்ளப்படுவதால், அதை 'வொய்ஸ் ஓவர் ஐ.பி.' என்கிறார்கள். இணையம் வழியாகக் குரல்களை எடுத்துச் செல்லும்போது எண்ணற்ற பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். 1995ம் ஆண்டு முதலே ஐ.பி. போன் மொடல்கள் புழக்கத்துக்கு வந்துவிட்டாலும், பெரும் பாய்ச்சல் ஏற்பட்டது 'ஸ்கைப்' (Skype) என்ற செயலி பயன்பாட்டுக்கு வந்தபிறகுதான்.

'ஸ்கைப்' என்பது என்ன? அது, கணினியில் வேலை செய்யும் ஒரு சின்ன செயலி. இன்று வரை இலவசமாக உள்ள சேவை இந்த 'ஸ்கைப்'. இதை நீங்கள் உங்கள் கணினியில் டவுன்லோட் செய்துகொண்டு, ஒரு ஐ.டி., பாஸ்வேர்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


உருவாக்கிக்கொண்டு விட்டால் போதும். உங்களைப் போல், ஏற்கெனவே 'ஸ்கைப் ஐ.டி.' உள்ள ஒருவரோடு உங்களால் சுலபமாகப் பேச முடியும்.

இந்த 'ஸ்கைப்' இன்றைக்கு ஒன்லைன் சமூகத்தையே மாற்றி அமைத்துவிட்டது. உதாரணமாக ஒருவரோடு ஒருவர் பேசும் போது, "உன்னை நாளை கூப்பிடறேன்" என்று சொல்வது போய், "உனக்கு நாளை 'ஸ்கைப்' பண்ணுகிறேன்" என்று சொல்லும் அளவுக்குப் பயன்பாட்டில் தோய்ந்துபோய்விட்டது 'ஸ்கைப்'. 2003 ல் தொடங்கப்பட்ட 'ஸ்கைப்' சேவையை இன்று உலகெங்கும் கிட்டத்தட்ட பத்து கோடி பேர் பயன்படுத்துகிறார்கள்.

இவ்வளவு பேர் 'ஸ்கைப்' பயன்படுத்த காரணமென்ன என்ன வசதிகள் அதில் இருக்கின்றன? முதல் வசதி... இது இலவச சேவை. அதாவது, சாதாரண போனில் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினரோடு பத்து நிமிடம் நிதானமாகப் பேசவேண்டுமென்றால், குறைந்தபட்சம் இரண்டு நூறு ரூபாய் நோட்டையாவது நீங்கள் கீழே வைத்தாக வேண்டும். ஆனால் 'ஸ்கைப்'பில் ஒரு பைசா செலவில்லை என்றே சொல்லலாம். அதாவது, நீங்கள் இன்டர்நெட் இணைப்பு வைத்திருந்தால் போதும்.

பல 'வி.ஓ.ஐ.பி.' சேவைகளில் உள்ள ஒரு பிரச்னை... இணைய தொடர்பு தரும் நிறுவனங்கள் '.:பயர்வோல்' (Firewall) என்னும் தடுப்பு அரண்களால் அவற்றைத் தடுப்பதுதான். இதை மீறி, குரலைப் பரிமாறிக்கொள்வது என்பது மிகவும் கடினம். 'ஸ்கைப்' இதையும் உடைத்துவிட்டது. எந்த விதமான தடுப்பு அரண்களையும் மீறி, 'ஸ்கைப்' வேலை செய்யும்!

உங்கள் நண்பர் ஒருவர் ஜெர்மனியில் இருக்கிறார். மற்றொரு நண்பர் நைஜீரியாவில் இருக்கிறார். நீங்களோ யாழ்ப்பாணத்தில். எல்லோரும் சேர்ந்து பேச முடியுமா? 'ஸ்கைப்'பில் முடியும். ஆச்சர்யமாக இருக்கிறது இல்லையா? ஸ்கைப்பை நிறுவிக்கொள்ள என்ன




வேண்டும்? குறைந்தபட்சம், 'விண்டோஸ் எக்ஸ்.பி.' என்னும் இயங்குதளம் (Operating System) உள்ள கணினி வேண்டும். நல்லதொரு அகலபாட்டை (Broadband) இணைய இணைப்பு வேண்டும். கூடவே பேச, ஒரு மைக்கும், கேட்க ஹெட்போனும் வேண்டும். நம்முடைய சண்ரெல் ,ரெலிக்கொம் களினது டயலப் இணைப்புக்களின் உதவியுடன் இதனைப்பயன்படுத்துவது கல்லில் நாரு ரிப்பதற்கு சமன்.துல்லியமற்றதும் அடிக்கடி சிக்கல்கொடுப்பதாகவும் இரு க்கும். சீ.டி.எம்.ஏ ஓரளவுக்கு நின்று பிடிக்கும் என்று சொல்லலாம்.பொதுவில் யாழ்ப்பாணத்திற்கு தற்போதைக்கு ஏற்புடையதானதல்ல.

'ஸ்கைப்' என்பது ஒரு சேவை தான். இதுபோல், 'கணினி கணினி' பேசுவதற்கான வேறு பல திறந்த ஆணை மூல செயலிகளும் இணையத்தில் கிடை க்கின்றன. முக்கியமாக 'அமிசிபோன்' (amiciPhone), 'டெலி2' (Tele2), 'எகிகா' (Ekiga) போன்ற செயலிகளை நீங்கள் டவுன்லோட் செய்து கொள்ளலாம். ஆனால், இந்தத் துறையில் 'ஸ்கைப்'தான் முன்னணியில்..

'ஸ்கைப்' மாதிரி இன்னும் பெரும் புகழோடும் தரத்தோடும் இருக்கிறது என்றால், அது 'கூகுள்' நிறுவனம் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

'கூகுள்ரோக்' (Google Talk) என்ற VOIP சேவைதான்.

உங்களுக்கு ஒரு 'ஜிமெயில்' (Gmail) பயனாளர் ஐ.டி. இருந்தால் போதும். பிற 'ஜிமெயில்' நண்பர்களோடு, நீங்கள் சற்றிங் செய்ய முடியும், பேச முடியும். 'கூகுள் ரோக்'கின் ஓர் அற்புதம், அதன் குரல் துல்லியம். எந்த நாட்டில் இருந்து பேசினாலும், பக்கத்தில் நின்று பேசுவதுபோல் அப்படியொரு துல்லியத்தைக் கொண்டிருக்கிறது இந்த சேவை.

கூகுளுக்கு முன்னாலேயே தொடங்கிய சேவை, 'யாஹூ' மெசஞ்சர்' என்ற செயலியில் இருக்கும் அழைப்பு (Call) சேவை. ஆனால், இதுநாள் வரை, பல பிரச்னைகளைச் சந்தித்து வந்தது இந்த சேவை. முக்கியமாகக் குரல் பரிமாற்றம் அவ்வளவு சிறப்பாக இல்லை. ஆனால், சமீபத்தில் ஒரு சில தொழில்நுட்ப வேலைகளைச் செய்து முடிக்கவே புதிய பதிப்பில் குரல் துல்லியம் பெற்றிருக்கிறது

இப்போது அடுத்த கட்டத்துக்கு வந்திருக்கிறோம். 'வி.ஓ.ஐ.பி.' பற்றிப் பேசும்போதே, உங்களுக்கு இது தோன்றியிருக்கும்... 'கணினி - கணினி' மட்டும்தான் பேச முடியுமா? 'கணினி - செல்போன்', 'கணினி - சாதாரணபோன்' பேச முடியாதா? தாராளமாகப் பேசலாம்! 'கணினி - கணினி' பேசும்போது அது மொத்தமும் இணையம் வழியாகவே நடப்பதால், வேறொரு வலையமைப்புக்குள் போக வேண்டியதில்லை. அதனால் அது இலவச சேவையாக இருக்கிறது. இணையத்தில் இருந்து ஒரு செல்போன் வலையமைப்புடனோ அல்லது சாதாரண போன் வலையமைப்புடனோ தொடர்பு கொள்ளும்போது, அதற்கான செலவு இருக்கத்தானே செய்யும்? இதைத்தான் 'ஸ்கைப்' கட்டண சேவையாக வைத்திருக்கிறது.

இன்னொரு சந்தேகமும் எழும்... சாதாரண போனில் இருந்து இந்தக் கணினி போனுக்குக் கூப்பிட முடியாதா? ஆகா... தாராளமாக! ஆனால், இதுவும் கட்டண சேவையாகத்தான் வரமுடியும். 'வி.ஓ.ஐ.பி.', 'வி.ஓ.ஐ.பி.' என்று அடித்துக்



கொள்கிறோமே, அது அப்படி என்ன மாற்றத்தைக் கொண்டு வந்துவிடும்? என்ன மாற்றத்தைக் கொண்டு வராது?

உங்கள் நிறுவனத்துக்கு இலங்கை முழுவதும் கிளைகள் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்... ஒவ்வொரு கிளையும் அடுத்த கிளையை போனில் தொடர்புகொண்டே முதலுக்கு மோசம் செய்துவிடுவார்கள். 'வி.ஓ.ஐ.பி.' போன்களை நிறுவுங்கள். இணைய செலவோடு முடிந்தது! அதேபோல் வெளிநாட்டுத் தொடர்பில் வேலை செய்கிறீர்களா? உங்களுக்கு 'ஸ்கைப்' மாதிரி ஒரு உற்ற தோழன் கிடைக்கவே மாட்டான். செலவும் மிச்சம், துல்லியமும் ஆச்சு!

இவற்றினை எப்படி நாம் உபயோகிப்பது என்று. இங்கே எழுதவில்லையே என்று உங்களில் பலர் நினைப்பீர்கள் முடிந்தால் உரிய மென்பொருட்களை இறக்கி உபயோகித்துப் பயன்பெறுங்கள் இல்லையெனில் மைகொம்யூட்டரை தொடர்ந்து வாசியுங்கள் அடுத்தடுத்த இதழ்களில் அதுபற்றி விபரம் தரப்படலாம். எமது அலுவலகத்துக்கு படையெடுத்து விடாதீர்கள்(?)சந்தேகம் இருந்தால் வினாக்களாக எழுதி அனுப்புங்கள் கொம்ப்யூட்டர்ஜி பதிலளிப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விசுவல்பேசிக் 6.0 – பாகம் 04

த.தவரூபன்

இம்முறை மிகவும் பிரபல்யமானதும் பயனாளர்களிடமிருந்து உள்ளீடுகளை பெற்றுக்கொள்வதற்குமெனப் பயன்படுத்தப்படுகின்ற சொற்பெட்டி(Text Box) பற்றி சிறிது கவனம் செலுத்துவோம். இது கருவிப்பெட்டி (Tool Box) இல் **ab** என்ற அடையாளக்குறியுடன் காணப்படுகின்றது. இதிலே குறிப்பிட்டுக்கூறக்கூடியதான குணவியல்புகளாக(Properties) பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

**1.Name-**

இது குறித்த சொற்பெட்டியின் பெயரை குறிக்கும். பெயர் எப்பொழுதும் txt என்ற மூன்றெழுத்துக்களுடன் ஆரம்பிக்கப்படும் உ-ம்: txtFirstName

**2.Appearance-**

சொற்பெட்டியின் தோற்றப்பாடு எப்படியிருக்கவேண்டும் என்பதை இதனூடாக மாற்றிக்கொள்ளலாம். சாதாரணமாக 1-3D என்றிருக்கும் எனினும் 2-Flat என இடுவதன் மூலம் நல்லதொரு தோற்றப்பாட்டினை அவதானிக்கலாம்

**3.Border Style-**

பெட்டியின் விளிம்புக்கோடு காணப்படவேண்டுமா அல்லது வேண்டாமா என்பதை இதனூடாக தீர்மானிக்கலாம். இதனுடைய பெறுமானங்கள் Fixed Single அல்லது None ஆகும்

**4.Enabled-**

பெட்டி செயல் நிலையில் காணப்படவேண்டுமா அல்லது வேண்டாமா என்பதை இதனூடாக தீர்மானிக்கலாம் இதனுடைய பெறுமானங்கள் True அல்லது False ஆகும். False ஆக மாற்றின் பெட்டி தெரியும் ஆயினும் அதனை உபயோகிக்க முடியாது மங்கலாக தோற்றமளிக்கும்

**5.Font-**

பெட்டிக்குள் எழுதப்படும் விடயங்கள் எந்தவகையான எழுத்துருவில் இருக்கவேண்டும் எந்தளவிலானதாக இருக்கவேண்டும் என்பதை இதன்மூலம் தீர்மானிக்கலாம் ஏதாவது ஒரு வகையான எழுத்துரு அல்லது அளவில் தான் மாற்ற முடியும்

**6.MaxLength-**

பெட்டிக்குள் மொத்தமாக எத்தனை எழுத்துக்களை உள்ளிட முடியும் என்பதை இந்த பகுதியில் நிர்ணயம்செய்யலாம். உதாரணமாக இதற்கு 10 என இட்டால் 10 எழுத்துக்களுக்கு மேற்பட்டு ரைப் செய்ய அனுமதிக்காது

**7.MultiLine-**

பெட்டிக்குள் ரைப்செய்துகொண்டு செல்கையில் எமது பெட்டியின் அகலத்திற்கு அப்பாலும் சென்றோம் எனில் பெட்டியின் அளவில் மாற்றம் ஏற்படாத போதிலும் ரைப்செய்ய அனுமதிக்கப்படுவீர்கள்.ஆயினும் அவை ஒரே வரியில் தான் இருக்கும் Cursor இனை உபயோகித்து உள்ளடக்கத்தினை வாசிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதனைத்தவிர்த்து அகலத்தினை மாற்றாது உயரத்தினை கூட்டி வரையப்பட்ட பெட்டியினுள் ரைப்செய்யப்பட்டவைகளை அடுத்தடுத்த வரிகளுக்கு இறங்கி வரச்செய்து ஒரே பார்வையில் Scrol Bar இன் உதவியுடன் கூடியளவிலான உள்ளீடுகளை வாசிக்கவும் வழங்கவும் இந்த குணவியல்பிற்கு True என கொடுப்பதன் மூலம் சாத்தியமாகும்

**8.ForeColor-**

பெட்டிக்குள் எழுதப்படும் விடயங்கள் எந்த நிறத்தில் தெரியவேண்டும் என்பதை தீர்மானிக்கும் குணவியல்பு இதுவாகும் இதிலே கிளிக்செய்து கிடைக்கும் நிறப்பட்டையிலே Pallet என்ற Tap இனை தெரிவுசெய்து அதில் இருந்து விரும்பிய நிறத்தினை தெரிவுசெய்யலாம்

**9.PasswordChar-**

சாதாரணமாக நாம் கடவுச்செற்களை(Passwords) இடும்போது ரைப் செய்யப்படுபவை எமக்கு தெரியாமல் புள்ளி அல்லது நட்சத்திர குறியீடு மட்டும் தென்படும். அது கடவுச்சொல்லை மற்றவர்களிடமிருந்து பாதுகாப்பதற்கான ஏற்பாடாகும். அவ்வாறான ஏற்பாடுகள் நாம் ஒரு புறோகிராமினை வடிமைக்கும் போது செய்யவேண்டி ஏற்படலாம். அச்சந்தர்ப்பத்தில் உள்ளீடுகளை பெற்றுக்கொள்வதற்காக பொதுவில் பயன்படுத்ததும் சொற்பெட்டிகளைத்தான் பயன்படுத்துவோம் எனிலும் வழங்கப்படும் உள்ளீடு வெளியில் காட்டப்படாமல் பெறவேண்டும் அதற்கு குறித்த சொற்பெட்டியின் மேற்படி குணவியல்பிற்கு எதாவது எழுத்தையோ குறியீடையோ பெறுமானமாக கொடுத்தால் Run செய்யும்பொது பயனாளர் குறித்த பெட்டியினில் ரைப்செய்கையில் வெளியில் குறித்த எழுத்தோ குறியீடோ மாத்திரம் தெரியும் உண்மையான பெறுமானம் மறைக்கப்பட்டிருக்கும்

**10.Locked**

இது True என்ற பெறுமானத்தை கொண்டிருப்பின் சொற்பெட்டி செயல் நிலையில் இருக்கும் இதே கணத்தில் அதனுள் எதும் ரைப் செய்யப்படமுடியாத நிலை காணப்படும்

**11.Text-**

சொற் பெட்டியினை பொறுத்தவரையில் மிகவும் பிரதானமான குணவியல்பு இதுவாகும். பயனாளரினால் ரைப்செய்யப்படும் உள்ளீடுகள் யாவும் இக்குணவியல்பு மூலமாகவே அறியப்படுகிறது. இக்குணவியல்புக்கு கொடுக்கப்படும் பெறுமானமே பெட்டியினுள் பார்வைக்கு தெரிந்து கொண்டிருக்கும்


மேற்குறிப்பிட்ட குணவியல்புகளில் 1 தொடக்கம் 5 வரையிலானவை பொதுவாக எல்லா Control களுக்கும் உரியவையே எனவே இவ்விளக்கம் அவற்றுக்கும் பொருந்தும்.

மேலே குறிப்பிடப்பட்டனவற்றினை விடவும் மேலதிகமாக பல குணவியல்புகள் இருக்கின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கனவாக SelText , SelLength, SelStart போன்றனவற்றையும் SetFocus என்ற Method இனையும் குறிப்பிடலாம் இவற்றை உதாரணம் ஒன்றின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும் சொற்பெட்டி ஒன்றினை Form இல் சேர்த்து பட்டன் கிளிக் இற்கு பின்வரும் ஆணைத்தொடரை எழுதினால் என்ன நடைபெறும் எனப்பார்ப்போம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

```
Private Sub Command1_Click()
Text1.SelStart = 0
Text1.SelLength = 4
Text1.SetFocus
End Sub
```




சொல்பெட்டியினுள் இருக்கும் சொல்லில் முதல் 4 எழுத்துக்கள் கொண்ட பகுதி தெரிவுசெய்யப்பட்டு நிழல்படுத்தப்பட்டிருக்கும்.

இங்கு SelStart ஆனது எங்கிருந்து தெரிவுசெய்யப்படவேண்டும் என்பதையும் SelLength ஆனது எவ்வளவு நீளமான பகுதி தெரிவுசெய்யப்படவேண்டும் என்பதையும் குறிக்கும் SetFocus என்ற Method ஆனது குறித்த சொல்பெட்டியில் தெரிவுசெய்யப்பட்டபகுதி சுட்டப்படவேண்டும் என்பதற்கான ஆணையாகும்.





இந்தவேளையில் இன்னுமொரு பட்டன் கிளிக் இற்கு Text1.SelText = "Test" என எழுதப்பட்டிருந்தால் அது நடைபெறும்போது மேலே தெரிவுசெய்யப்பட்டிருந்த பகுதிக்கு பதிலாக Test என்பது பதிலீடுசெய்யப்பட்டிருக்கும் இனி சொல்பெட்டியின் குறிப்பிடத்தக்க செயற்பாடுகளைப் (Events)பார்ப்போம். அவையாவன

```
Private Sub Text1_Change()
End Sub
Private Sub Text1_Click()
End Sub
Private Sub Text1_KeyDown(KeyCode As Integer, Shift As Integer)
End Sub
Private Sub Text1_KeyPress(KeyAscii As Integer)
End Sub
```

மேலே கண்டவற்றில் Click செயற்பாடு சாதாரணமாக சொல்பெட்டியில் கிளிக்செய்யும் போது என்ன செய்யவேண்டும் என்ற ஆணைகளை கொடுப்பதற்கு பயன்படுத்தப்படும் Change செயற்பாடு சாதாரணமாக சொல்பெட்டியில் காணப்படும் உள்ளடக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




மாற்றங்களை செய்யும் ஒவ்வொரு கணமும் என்ன செய்யவேண்டும் என்ற ஆணைகளை கொடுப்பதற்கு பயன்படுத்தப் படும் KeyDown செயற்பாடு பயன்படுத்துகையில் சாதாரணமாக சொல் பெட்டியில் ரைப் செய்யும் ஒவ்வொரு கணமும் என்ன விசையினை அழுத்துகின்றோமோ அதனுடைய ASCII இலக்கம் KeyCode இற்கும் Shift, CTRL, ALT விசைகளில் எந்த விசையினை அழுத்துகிறோமோ அதனுடைய பெறுமானம் Shift என்பதற்கும் வழங்கப்படும் இதனைக்கொண்டு நாம் விசைக்கேற்ற செயற்பாடுகளை செய்வதற்கான ஆணைகளை மேற்படி Event Procedure இனுள் எழுதலாம்

KeyPress செயற்பாடு பயன்படுத்துகையில் சாதாரணமாக சொல்பெட்டியில் ரைப் செய்யும் ஒவ்வொரு கணமும் என்ன விசையினை அழுத்துகின்றோமோ அதனுடைய ASCII இலக்கம் KeyAscii இற்கு வழங்கப்படும் இதனைக்கொண்டு நாம் விசைக்கேற்ற செயற்பாடுகளை செய்வதற்கான ஆணைகளை மேற்படி Event Procedure இனுள் எழுதலாம்

மேற்படி செயற்பாடுகளில் விசைகளின் இலக்கங்களை நாம் பின்வருமாறு ஒரு சிறு புரோகிறாம் எழுதி கண்டுபிடித்துக்கொள்ளலாம். பின்னர் நாம் புரோக்கிராம்கள் வடிவமைக்கும்போது பயன்படுத்திக்கொள்ளலாம்

```
Private Sub Text1_KeyPress(KeyAscii As Integer)
MsgBox KeyAscii
End Sub
```

உதாரணமாக சொல்பெட்டி ஒன்றினுள் ஆங்கில எழுத்துக்கள் தவிர்ந்த வேறு எந்த எழுத்தையும் ரைப்செய்ய அனுமதிக்காமல் இருப்பதற்கு குறித்த சொல்பெட்டியின் KeyPress செயற்பாட்டு Procedure இற்குள் பின்வருமாறு ஆணைத்தொடர்களை எழுதிவைத்தால் சரி. முயற்சித்துப்பாருங்களேன்

```
If (KeyAscii < 65 Or KeyAscii > 90) And (KeyAscii < 97 Or KeyAscii > 122) And (KeyAscii <> 8) And (KeyAscii <> 32) And (KeyAscii <> 49) Then KeyAscii = 0
```

சொற்பெட்டி சம்பந்தமான பல விடயங்களை பார்த்தோம். பயிற்சியாக நீங்கள் ஒரு சொற்பெட்டியினுள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மாத்திரம் ரைப்செய்ய அனுமதிக்கும் வகையில் ஆணைத்தொடர்களை எழுதிப்பாருங்கள் அடுத்த முறை விடையுடன் சந்திக்கின்றேன் (தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எழுதப்பழகுவோம் HTML 3

-தவா-

மேற்கொண்டு சில பட்டிகளைப் பார்ப்போம். சில நேரங்களில் சில விடயங்களைப் பட்டியலிட நேரிடலாம். உதாரணமாக, கீழ்க் கண்ட புத்தகங்களை பட்டியலிட விரும்புகின் றீர்கள் என்று வைத்துக் கொள்வோம்

ஒற்றுமை

கணினி கற்றுக் கொள்ளுங்கள்

நோயற்ற வாழ்வு

புகை, மனிதனுக்குப் பகை

அது முறைப்படுத்திய பட்டியலாகவோ அதாவது 1,2,3... என வரிசைப் படுத்தியோ அல்லது முறைப்படுத்தா பட்டியலாகவோ(எந்த வரிசை முறையும் இல்லாமலோ) இருக்கலாம். இதை நம் பக்கத்தில் சேர்ப்பதைப் பற்றிப் பார்ப்போம்.

<OL> </OL> - O(rdered) L(ist) – முறைப்படுத்திய பட்டியல்

<UL> </UL> - U(nordered) L(ist) – முறைப்படுத்தாத பட்டியல்

இத்தோடு, பட்டியலின் உறுப்பைக் குறிக்க <LI> - L(ist) I(tem) என்ற பட்டியையும் சேர்க்க வேண்டும்.ஒரு முறைபடுத்திய பட்டியலைப் பார்ப்போம்.

```
<HTML>
<BODY>
<H1><CENTER><U>முதல் தலைப்பு</U></CENTER></H1>
நான் வாங்கி வந்த புத்தகங்கள்:
<OL>
<LI>ஒற்றுமை
<LI>கணினி கற்றுக் கொள்ளுங்கள்
<LI>நோயற்ற வாழ்வு
<LI>புகை, மனிதனுக்குப் பகை
</OL>
</BODY>
</HTML>
```

மேலுள்ளதை உங்கள் உலவியில் கண்டீர்களானால், புத்தகங்கள் 1 முதல் 4 வரை வரிசைப் படுத்தப் பட்டிருக்கும். வேறு விதமான வரிசைகளையும் பெற முடியுமா? முடியும்.

a,b,c,d... / A,B,C,D.. / i,ii,iii,iv... / I,II,II,IV...என ஏதாவது வரிசை முறைப்படியும் கையாள முடியும்.<OL> என்ற தொடக்கப் பட்டியினுள் என்ன மாதிரி வரிசை வேண்டும் என்று குறிப்பிட வேண்டும். உதாரணமாக, a,b,c,d என்ற வரிசையில் வேண்டுமானால் அது <OL type="a"> என இருக்கவேண்டும்

முறைப்படுத்தா பட்டியலில் வட்டமான , சதுரமான புள்ளிகளை <UL type="disc" > , <UL type="square"> , <UL type="circle"> என எதாவது ஒரு முறையில் எழுதி பெறலாம். இதை விட சிறு "புல்லட்" வகை படங் களையும் வரச்செய்யலாம் இதற்கு <UL imagesrc="images/bullet1.gif" > என எழுதலாம். இங்கு imagesrc என்ற குணவியல்புக்கு சிறிய படத்தின் முழு முகவரி கொடுக்கப்படவேண்டும்.

இதுவரை கண்ட பட்டிகள் அனைத்தையும் கையாண்டு ஒரு முழுமையான பக்கத்தை காணும் முன் மேலும் ஒரு உபயோகமான பட்டியைப் பார்ப்போம். சில நேரங்களில் பக்கத்தின் குறுக்கே கிடைக் கோடு இட வேண்டிய தேவை ஏற்படலாம். அதற்கு <HR> அதாவது (H)orizontal (R)ule என்ற பட்டியை உபயோகப் படுத்தவேண்டும். இந்த <HR>



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பட்டியை உபயோகித்தால் திரையின் இரு புறத்திலும் தொடும்படியாக ஒரு கிடைக் கோடு அமையும். தேவையானால் இதன் அகலத்தை குறைத்துக் கொள்ளலாம்.

வழி 1: முழு கோட்டின் அகலத்தில் இத்தனை சதவீதம் என்று சொல்லுதல்

<HR width="40%">

வழி 2: நமக்கு வேண்டிய கோடு, எத்தனை புள்ளிகளால் (pixel) ஆனதாக இருக்க வேண்டும் என்று சொல்லுதல். மேல் உள்ளதைப் போலவே, % குறி இல்லாமல் எழுத வேண்டும் <HR width="40">

இந்த மொழியின் சிறப்பு அம்சம் என்ன என்றால் ஓரிடத்திலிருந்து படிவத்தின் வேறு பகுதிக்கோ அல்லது வேறு பக்கத்திற்கோ தாவ வகை செய்வது. இதை Hyper link என்கிறோம். போக வேண்டிய இலக்கை, சுட்டி நிற்கும் சொற்களுடனோ அல்லது படத்துடனோ ஒட்ட வைக்கும் பட்டிதான் <A> என்பது. இந்த <A> பட்டியின் உள்ளே எந்த மாதிரியான தொடர்பு, எந்த இலக்கு என்று குறிக்க வேண்டும். இங்கு, இந்த பட்டியை உபயோகித்து எவ்வாறு பக்கத்தின் வேறுபட்ட பகுதிகளுக்குத் தாவலாம் என்று காண்போம்.

இதற்கு மேற்படி பட்டியின் HREF என்ற குணவியல்புக்கு செல்லவேண்டிய இடத்தின் முகவரியினை பெறுமானமாக கொடுக்கவேண்டும். உதாரணமாக பின்வரும் உதாரணத்தினை நோக்குவோம்

ஓரிடத்திலிருந்து மற்ற இடத்திற்குத் தாவ வேண்டுமானால் இரண்டு விடயங்களைத் தீர்மானம் செய்ய வேண்டும். ஒன்று சுட்டி. இரண்டாவது சுட்டப்படும் இடம்.

<A NAME="Mycomputer" HREF="http://mycomputer.speeditnet.com">Click Here To View My computer</A>

மேற்படி வரியை பக்கமொன்றில் HTML Coding ஆக எழுதி HTML கோப்பாக சேமித்து இதனை உலவியில் திறந்து கொள்ளும் போது இங்கு Click Here To View My computer என்ற வசனம் Hyper link இற்கு உள்ளாக்கப்படும் இதிலே கிளிக் செய்தால் http://mycomputer.speeditnet.com என்ற முகவரிக்கு கொண்டு செல்லப்படுவீர்கள். மேற்படி HREF இற்கு இன்னுமொரு பக்கத்தின் முகவரியினையும் வழங்க முடியும் அப்படி வழங்கின் குறித்த <A> பட்டிக்குள் உள்ளடங்கும் பகுதியை கிளிக் செய்ய குறித்த பக்கத்தினை சென்றடையலாம் இதுவரை நாம் கற்றுக் கொண்ட பட்டிகள்

| | |
|---|---|
| <HTML> | <FONT> |
| <BODY> | <OL> |
| <H1>...<H6> | <UL> |
| <B> | <LI> |
| <P> | <HR> |
| <BR> | <A> |
| <CENTER> | |

(தொடரும்..)


**HTML/CSS/Java Script/PHP/MySQL**

**மாறி வரும் இணைய உலகுக்கு ஏற்ப இணையத்தளங்களை வடிவமைத்துக்கொள்ளவும். இணைய வடிவமைப்புக்கான பிரத்தியேக கற்கைநெறியை மேற்கொள்ளவும் யாழ் நகரில் நாடவேண்டிய இடம்**

**Speed IT net திருநெல்வேலி**

0214 591871






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


## நிறைவுப்பக்கம்... வழங்குவது -ComputerMan-

## தொடக்க நிலையினருக்காக...




### Sound Recorder

கணினியில் Voice ஐ Record செய்ய இலகுவழி, Start menu இல் All Programs ஊடாக சென்று பெறும் Accessories பகுதியில் Entertainment menu வில் உள்ள Sound Recorder மென் பொருளினூடாக இலகுவாக Record செய்யலாம்




### Windows Movie Maker

*Start menu இல் All Programs ஊடாக சென்று பெறும் வின் டோஸ் மூவி மேக்கரில் எவ்வாறு வீடியோ ∴பைல்களை உருவாக்குவது ?*

நீங்கள் வின்டோஸ் மூவி மேக்கரினை திறந்து பைல் மெனுவில் உள்ள "import into collections" இனை கிளிக் செய்து பெறப்படும் வின்டோவினூடாக வீடியோ ∴பைல்களை சேர்த்ததும் "Clip" கள் அருகில் வரும் இவற்றினை ஒவ்வொன்றாக இழுத்து "Timeline" இனுள் விட்ட பின்னர் ∴பைல் மெனுவில் உள்ள "Save Movie File" இனை கிளிக் செய்து பெறப்படும் வின்டோவினூடாக வீடியோ ∴பைலாக சேமிக்கலாம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# My Computer
## சஞ்சிகை கிடைக்கும் இடங்கள்




பூபாலசிங்கம் புத்தகசாலை- யாழ்ப்பாணம்
சிறீலங்கா புத்தகசாலை- கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம்
சரஸ் புத்தகசாலை-யாழ் பஸ்நிலையம்
ரூபன் புத்தகசாலை- மனோகரா சந்தி.யாழ்ப்பாணம்
மார்சா கணினி நிறுவனம்-கன்னாதிட்டிசந்தி யாழ்.

சிறீகாந் புத்தகசாலை-நல்லூர் கோயில் முன்வீதி
சிறீ சாயி புத்தக நிலையம் நல்லூர் கோவில் முன்பாக
துஸ்யந்தன்களஞ்சியம்-நல்லூர் கோயில் பின்வீதி
புக்ஸ்பரடே-பரமேஸ்வரா சந்தி,திருநெல்வெலி
கனகா புத்தகசாலை- திருநெல்வேலி சந்தி
பிரகாந் கொமினிகேசன்- திருநெல்வேலி
SpeedITnet-திருநெல்வேலி

தூர்க்கா புத்தகசாலை-சுன்னாகம் பஸ்நிலையம்
பாக்கியா புத்தகசாலை-கொக்குவில் சந்தி
கணேசன் கொமினிக்கேசன்-கொக்குவில் சந்தி
யாகினி பிறின்ரேர்ஸ்-நாச்சிமார் கோயிலடி
லிங்கம் ஸ்ரோர்ஸ்-நாச்சிமார் கோயிலடி

மணியம்ஸ்ரோர்ஸ்-சாவகச்சேரி பஸ்நிலையம்
அருண் பிரிண்டேர்ஸ்-சங்கத்தானை
கிருஸ்ணா கடை- ஆவரங்கால் சந்தி
சிபான் றேடர்ஸ்- அச்சுவேலி சந்தி

நாயகபாலன் புத்தக நிலையம்-யாழ் வீதி மானிப்பாய்
குரு புத்தகசாலை மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்பாக
அம்பாள் புத்தக நிலையம்-தாவடி வீதிமானிப்பாய்
திரு.க.உமாபாலன்- சித்தன்கேணிசந்தி
குட்டி ஸ்ரோர்ஸ்-நவாலி சென்பீற்றர்ஸ் முன்பாக

ராஜலட்சுமி மல்ரி பலஸ்-நெல்லியடி
மொடேன் ஸ்ரோர்ஸ்-நெல்லியடி
செல்லாச்சி புத்தகசாலை-பருத்தித்துறை
கணன்போட்டோ(பத்மநாதன்கடை)-பருத்தித்துறை
கமலா புத்தகசாலை -பருத்தித்துறை

உங்கள் பிரதேசத்திற்கு இன்னும் வரவில்லையா?
விநியோக முகவர்களின் விபரங்களுடன் அழையுங்கள் **021-4591871**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மலிவாக இணையத்தளம் அமைக்க வேண்டுமா???.....

......com.org.net.info.biz.lk.in.uk.us....

எதுவானாலும் பதிவு செய்யலாம்!

ஒரேநாளில் அனைத்தும்!



100 MB..

Windows/ Linux Servers

எமது சேவர்கள் USA,UK நாடுகளில்!

MySQL/MSSQL Databases

ரூபா 1000 தொடக்கம்

பிரத்தியேக கணினி கற்கைநெறிகள் !



Visual Basic 6.0,Visual Basic.net
C++,Java,Pascal,Photo Shop
Web Design(PHP &MySQL),HNDIT
Tally Accounting

போன்ற Professional Courses களினை பிரத்தியேகமாக பல்கலைக்கழக,உயர்தொழில்நுட்ப மாணவர்களின் பாடத்திட்டத்திற்கமைவாக கற்பிப்பதில் தனியிடம்...

கணினியில் வைரஸ் தொல்லையா?




கணினி பழுதா? எதுவானாலும் நீக்கி விடுகின்றோம்
FREE ANTIVIRUS UPDATE களினை தருகின்றோம்
குறைந்த செலவில் OS நிறுவிடவும், கணினித்திருத்தவேலைகளுக்கும் பராமரிப்பு வேலைகளுக்கும் மற்றும் நவீன கணினிகளை உங்கள் தெரிவில் அசெம்பிள் செய்து பெற்றிடவும் நாடவேண்டிய நிறுவனம் "ஸ்பீட் ஐ.ரி நெட்" !



கணினி சொப்ட்வெயார் வடிவமைப்பு

உங்கள் நிறுவனத்துக்கான
பிரத்தியேக கணினி மென்பொருளை
தமிழிலோ ஆங்கிலத்திலோ
குறைந்த செலவில்
வடிவமைத்து தருகிறோம்

மட்டுப்படுத்தப்பட்ட இணைய (இன்ரநெட்)சேவை

மின்னஞ்சல் சேவை,தொலைநகல் மற்றும் ஸ்கானிங்,சீடி றைற்றிங்,டிஜிரல் படங்கள்

Pay your Bills Online

அமெரிக்கா DV-2009 விண்ணப்பம்!

SPEED IT NET

Web:http://www.speeditnet.com
Hotline: 0777 563213,Tel/Fax:021-4591871
72/28 Panikkar Lane,Off Palaly Road,Thirunelvely,Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org